5. மேலும் எந்தெந்த நோயாளிகளுக்கு இம்மருந்துகளை கொடுக்கலாம்; எந்நோயில் உபயோகிக்கக்கூடாது போன்றவற்றையும் நிர்ணயிக்கலாம்.

கட்டுரையில் குறிப்பிட்டிருக்கும் மருந்துகள், ஆய்வுக்காக எடுத்துக் கொள்ளப்பட்ட சில மருந்துகளேயாகும். இவ்வாய்வு நடைமுறையில் இருக்கும் எல்லா மருந்துகளுக்குமே அவசியமாகும். சித்த மருந்துகளின் சிறப்பை, நவீன விஞ்ஞான உலகிற்கு நிரூபிக்க இப்படிப்பட்ட ஆய்வுகள் முதல்படியாக அமையும் என்பது இவ்வாராய்ச்சித் தாளின் கருத்தும் நோக்கமும் ஆகும்.

INTEGRATED MEDICAL EDUCATION

Dr. S. VASEEKARAN,
B.I.M., D.Ac., FSAMS, FCAMS,
TUTICORIN - 628 003.

CHAIRMAN, INDIAN RED CROSS SOCIETY, TUTICORIN HON. SEC., SOCIETY for `INTEGRATION OF MEDICAL & ALTERNATIVE MEDICAL SYSTEMS SIMAMS) DIRECTOR, Society for Emergency Aid & Treating (SEAT) DIRECTOR, HOLISTIC CENTRE for EDUCATIONAL TEACHING & HEALTH (HOLETH).

இருபத்தி ஒன்றாம் நூற்றாண்டின் நுழைவாயிலில் நின்று கொண்டு, கழிந்த காலங்களின் அனுபவ அறிவையும், நிகழ்காலத்தின் வளமையான விஞ்ஞான அறிவுச் செறிவையும் கலந்து, வரும் காலத்திற்கான அற்புதங்கள்காண மானிட குலமே தவம் செய்து கொண்டுள்ளது. அனைத்துத் துறைகளிலும் புதுமை காண விழைந்துள்ளது. 'பழையன கழிதலும், புதியன புகுதலும்' என்பதற்கு இணங்க மருத்துவத்துறையிலும் பல புதுமைகளை ஏற்படுத்தி மனிதன் நோயற்ற வாழ்வு வாழமட்டுமல்லாது, பரிபூரண உடல் மனரீதியான ஆரோக்கியமான வாழ்வு வாழ வழிவகுப்பது நம் தலையாய கடமையாகும். கலப்புத் திருமணத்தில் கனிந்த மலர் நிறைவானதாக உள்ளது போல, கலப்பு உணவினால் ஊட்டம் மிகு சேர்வது போல, கலப்பு மருத்துவ முறையினால் அனைத்து நோய்களும் தீர்க்கப்படுவது மட்டுமல்லாது, பூரண நோய் தடுப்பும், மனித குலத்திற்கு நிறைந்த ஆரோக்கியமான வாழ்வும் பெற முடியும்.

நவீன விஞ்ஞான மருத்துவ வசதிகள் எத்தனை வந்தாலும் மாற்றுமுறை மருத்துவங்களில் மக்களின் ஆர்வம் கூடிக் கொண்டேதான் போகிறது. பழைய கால மருத்துவ முறையான சித்த, ஆயுர்வேத, யுனானி, வர்மக்கலை (அக்குபங்சர் போன்ற முறை) காந்த சிகிச்சை, மற்றும் யோகா, இயற்கை வைத்திய முறை, பிரமிடு – ரெய்க்கி – இத்யாதி மருத்துவமுறைகளும். மீண்டும் உயிர்பெற்று நவீன காலயுக்திகளுடன் மக்களிடையே மறுபடியும் பிரபல்யமாகிக் கொண்டுள்ளது. ஏன்? நவீன மருத்துவமுறையான அலோபதியினால் மட்டும் அனைத்து நோய்களையும் குணப்படுத்த முடியவில்லை. மேலும் பல பக்கவிளைவுகள் ஏற்படும் பயமும் உள்ளது. முழுமையான மானிடத் தேவைகளை அலோபதியினால் பூர்த்தி செய்ய முடியவில்லை என்றே சொல்லலாம். இவைகளினாலே மாற்று மருத்துவமுறைகளும் தற்போது மக்களிடையே பிரபலமாகிக் கொண்டுள்ளது. ஆனால் பல போலி மருத்தவர்களும், அடிப்படை மருத்துவ அறிவு இல்லாதவர்களும் வியாபார நோக்கில் மக்களை ஏமாற்றுவது பரிதாபத்திற்கு உரியது மட்டுமல்ல, வேதனைக் குரியதும் ஆகும்.

புல்லுருவிகளும் - நட்சத்திரங்களும்

பெ. இராஜலெட்சுமி, இ.சி.ம.அ., **த. சித்ரா** இ.சி.ம.அ.,
வே. புனிதா, இ.சி.ம.அ., பாளையங்கோட்டை.

முன்னுரை

கையாலாகாதவனை - காட்டிக் கொடுப்பவனைப் பொதுவாகப் புல்லுருவி என்பார்கள். ஆனால், நம் மருத்துவத் துறையில் புல்லுருவிகளைப் பற்றிக் கூறும் போது ஏதாவது மரங்களில் ஒட்டிப் பற்றிப் படர்ந்திருப்பதைப் புல்லுருவி என்போம் இதைத் தாவர இயலாளர்கள் ஒட்டுண்ணி, சாருண்ணி என்பார்கள். புல்லுருவி என்பது எந்தத் தாவரத்தைப் பற்றி இருக்கிறதோ அந்தத் தாவரத்தின் பண்புகளையும், மருத்துவக் குணங்களையும் முற்றிலும் தன்னகத்தேக் கொண்டிருக்கும். இவற்றின் மருத்துவத் தன்மையையும் நோய் நீக்கும் ஆற்றலையும் சித்தர்கள் நுணுகி ஆய்ந்து அறிந்திருக்கிறார்கள். ஆய்ந்து அறிந்த உண்மைகளை ஆங்காங்கே குறித்தும் வைத்துள்ளார்கள். இந்தப் புல்லுருவிகளில் காயகல்பத்தன்மை உள்ளவையும், ஆற்றலைத் தருபவையும், அறிவை வளர்ப்பவையும், நோயைத் தீர்ப்பவையும், நஞ்சைப் போக்குபவையும், ஆண் பெண்களுக்கிடையே ஈர்ப்பை, வசியத் தன்மையை ஏற்படுத்துபவையும் உள்ளன. நம் சித்த மருத்துவத்தின் அடிப்படைக் கொள்கையான ''அண்டத்தில் உள்ளதே பிண்டம், பிண்டத்தில் உள்ளதே அண்டம்'' என்ற தத்துவத்தின்படி புல்லுருவிகளின் மீது அண்டத்திலுள்ள நட்சத்திரங்களின் ஆட்சியையும், அவற்றின் பயன்பாடுகளையும் சித்தர்கள் தம் நுண்ணறிவால் அறிந்து அதையும் நமக்கு விட்டுச் சென்றுள்ளார்கள். மேலும் எந்த நட்சத்திரத்தில் எந்தக் கிழமையில், எந்தப் பொழுதில், எந்த மரத்தின் மேலுள்ள, எந்தப் புல்லுருவியை எடுத்தால் அது அந்தப் பயனைத்தரும் என்பதையும் எழுதி வைத்துள்ளார்கள். எனவே ''புல்லுருவி தானே'' என்று அலட்சியம் செய்யாமல் சித்தர்கள் கூறிய வழியில் சென்று, புல்லுருவிகளையும் நட்சத்திரங்களின் அடிப்படையில் பயன்படுத்தி, மக்களின் நோய்களைக் களைந்து, இந்த புத்தாயிரத்தில் சித்தர்களின் கனவாகிய ''நோயில்லா வாழ்வை'' அளிக்க நாம் உறுதி கொள்வோம்.

பிளவை நோய் - ஓர் ஆய்வு

ஜெ. சி. வில்ஸ் ஸ்டுபெர்ட் ஸ்டாலின், இ.சி.ம.அ.,
அரசினர் சித்த மருத்துவக்கல்லூரி, பாளையங்கோட்டை.

சித்தர்களின் கோட்பாட்டின் படி நான்காயிரத்து நானூற்று நாற்பத்தெட்டு நோய்கள் உடலைத் தாக்கும் என அறிகிறோம். இதில் அடங்கியதே பிளவை நோய் ஆகும். முக்குற்ற வேறுபாட்டாலும், உடற் தாதுக்கள் கேடடைவதாலும் நீரிழிவு நோய்களாலும், காயத்தாலும் இப்பிளவைகள் பிறப்பெடுக்கின்றன. இப்பிளவைகள் தடித்து வீங்கி மிகுந்த வலியை உண்டாக்கி நாளுக்கு நாள் பரவி பின் பழுக்கும் பழுக்கும் தருவாயில் தோல் கறுக்கும். பின் அதில் சிறுசிறு கொப்பளங்கள் போல் பருக்கள் வந்து உடைந்து சீழ் வடியும்.

மருத்துவம்

முதலில் பிளவையை கரைக்க மருத்துவம் செய்ய வேண்டும். ஒற்றடம் இட்டோ, பூச்சுகளாலோ கரைகிறதா என்று பார்த்து கரையாமல் வலி அதிகரித்தால் பாடாணங்கள் அல்லது காரசாரம் சேர்ந்த மருந்துகளைப் பூசி விரைவில் பழுக்கச் செய்ய வேண்டும். பாடாணத்தில் அமிலத்தன்மை இருப்பதாலும் காரசாரத்தின் அரிக்கும் தன்மையாலும் பிளவை புரையேறி மேல் உள்ள தோலானது இலேசத்துவம் அடையும் பின் உள் இருக்கும் கெட்ட இரத்தம், சலம், அழுகிய சதைகளை நீக்கி, பொடி அல்லது எண்ணெய் தடவி புண் ஆற்ற வேண்டும். குருதியைச் சுத்தப்படுத்த உள் மருந்துகள் உட்கொள்ள வேண்டும்.

a) ஒற்றடம்

நந்தியாவட்ட இலை, வெள்ளுள்ளியும் சிறிது வெதுப்பி ஒற்றடம் இடலாம்.

b) பொடி

துருசை சிப்பி சுண்ணத்தில் தடவிய சீலையால் பொதிந்து 100 எருவில் புடமிட வெண்மை ஆகும். வெண்ணையில் குழைத்து தடவிட பிளவை பளுக்கும்.

c) பொடி

கீறிய பிளவை, மீது தூவ பூரப் பொடியும், புற வெண்ணையாக மத்தன் தைலம் உபயோகிக்கலாம்.

d) உள்மருந்து

கேடடைந்த குருதியை சுத்திப்படுத்த அமுக்கரா சூரணத்தை உபயோகிக்கலாம்.

நவபாசாணச் செந்தூரம்

மரு. டி. முத்துக்கிருஷ்ணன், பி.எஸ்.ஸி., இ.சி.ம.அ.,
உதவி மருத்துவ அலுவலர், கணபதிபாளையம், ஈரோடு மாவட்டம்.

முன்னுரை

உலகில் உள்ள கொடிய நோய்களான புற்றுநோய், வாத நோய்கள் போன்றவற்றை சித்த மருத்துவத்தில் உள்ள தலைசிறந்த நவபாசாணச் செந்தூரம், பஞ்ச பாசாணச் செந்தூரம் போன்ற மருந்துகளின் மூலம் குணப்படுத்தலாம் என்பது பற்றி ஆய்வுக் கட்டுரை.

மருந்து செய்முறை

நவபாசாணங்களான இலிங்கம், வீரம், பூரம், மனோசிலை, கௌரி, வெள்ளைப் பாடாணம் (சங்கு பாசாணம்), கந்தகம், மிருதார்சிங்கி, தாளகம், போன்றவற்றுடன் காந்தம் சேர்த்து சம எடையில் எடுத்து சுத்தி செய்த பின் கீழ்க்கண்ட மூலிகைகளில் - குப்பைமேனி, வெற்றிலைசாறு, செம்பருத்தி இலைச் சாறு, வெள்ளறுகுச்சாறு, துளசிச் சாறு, கண்டங்கத்திரிச் சாறு போன்றவைகளின் சாறுகளால் ஏறத்தாழ 4 சாமம் அரைத்து பின் வில்லைத் தட்டி காயவைத்து மண் சட்டியிலிட்டு, சில்லிட்டு புடம் இடவும். மேற்சட்டியில் பதங்கமானவற்றை மீண்டும் சுரண்டி கல்வத்திலிட்டு மேற்படி சாறுகளால் மீண்டும் அரைத்து, வில்லை தட்டி, காயவைத்து புடம் இடவும். இப்படி குறைந்தது 5 புடம் இட நவபாசாணச் செந்தூரம் கிடைக்கும். தக்க அனுபானத்தில் கொடுக்க புற்று நோய்கள், வாத நோய்கள் தீரும். கதிர்வீச்சு சிகிச்சை, கீமோ திரபி போன்ற முறைகளில் சிகிச்சை செய்தவர்களுக்கு சித்த மருத்துவமோ, மற்ற எந்த மருத்துவமோ பயனளிப்பது இல்லை. எனவே மேற்படி முறைகளில் சிகிச்சை பெறாதவர்களை மட்டும் முழு அளவில் குணமாக்க முடியும்.

சித்தர் கொள்கை

அ. அசினா பர்வின், இ.சி.ம.அ., **கே. செல்வராணி,** இ.சி.ம.அ.,
எஸ். ஜெசிமா பர்வீன், இ.சி.ம.அ., பாளையங்கோட்டை.

உணவே மருந்து மருந்தே உணவு என்பது சித்தர்களின் கொள்கை

சித்தரில் எல்லாம் வல்ல
சிவன்பத மலர்கள் போற்றி !
சித்தர்கள் எண்ணிலார் தம்
சீர்பாதம் பலவும் போற்றி !
சித்தர்தம் கருத்தே நிந்தே
செப்புவன் உணவு நன்றே!

மக்கள் தங்கள் உடல் நிலையை நன்கு அறிந்து அதற்குத் தகுந்தாற் போல் உண்பாராகில் இன்புற்று வாழ்வர். அவ்வாறின்றி அளவற்றுக் கண்டதை மிக மிகக் கொள்ளின் உடல், உயிர் பிணிக்கப்பட்டு நீங்காத் துன்பத்தில் மூழ்குவர். தட்ப வெப்பத்திற்கு ஏற்றாற் போலவும் உடலின் முக்குற்ற வேறுபாடுகளின் தன்மைக்கேற்பவும், அறுசுவைகளின் அளவிற்கு ஏற்பவும் உணவினை அறிந்து உண்டு நோயற்ற வாழ்வு வாழலாம். இக்கட்டுரையில் நாம் காண்பன - உணவே மருந்து; மருந்தே உணவு, அறுசுவை மருத்துவம், உணவிற்கும் குணத்திற்குமுள்ள தொடர்பு, உணவு பற்றிய அய்யனின் கூற்று, அன்றாட உணவில் உள்ள மருந்துப் பொருள், மிளகு - ஓர் கண்ணோட்டம், இஞ்சி - ஓர் கண்ணோட்டம், மஞ்சள் - ஓர் கண்ணோட்டம்.

புத்தாயிரத்தில் சித்தா குழந்தை

மரு. ஜி. இராஜநாயகி, இ.சி.ம.அ.,
மருத்துவ அலுவலர், கோவை.

ஆய்வின் நோக்கு

இன்றைய கால கட்டங்களில் குழந்தைப் பேறின்மையில் பெண்களின் பங்கு மிக அதிகமாக உள்ளது. சித்தர்களைப் பொருத்த வரையில் ''பெண் மலடே இல்லை'' என்பது தான் அவர்கள் கூற்று. சூழ்நிலை, பழக்க வழக்கங்கள், ஒழுங்கற்ற உணவு முறை போன்ற பல காரணங்களால் அதிக பெண்களுக்கு குழந்தைப் பேறு அடையும் வாய்ப்பு குறைந்து வருகிறது. இக்குறைபாட்டை நீக்கி சித்தர்களின் கூற்றை மெய்யாக்குவதே இக்கட்டுரையில் நோக்கம்.

நடப்புமுறை

சித்தர் விஞ்ஞானத்தை தற்கால விஞ்ஞானத்தின் படி ஒப்பு நோக்கினால் தான் அக்கருத்தை அனைவரும் ஏற்றுக் கொள்ளும் கால கட்டம் இது. எனவே சித்தர் இலக்கியத்தை நவீன அறிவியல் பார்வையில் ஆய்வு செய்து நோய்க்கணிப்பு செய்து சிகிச்சை அளித்தால் நல்ல பலன்களை அடைய முடிகிறது. சித்தர் தத்துவம், சித்த மருத்துவ அணுகுமுறை, நவீன அறிவியல் பார்வை இவற்றை ஒப்பிட்டு சித்த மருத்துவத்தின் மூலம் குணப்படுத்துவதே இக்கட்டுரையில் கையாண்ட வழி முறையாகும்.

முக்கிய முடிவு

நவீன மருத்துவத்தில் அறுவை சிகிச்சை மூலம் மட்டுமே குணப்படுத்தக் கூடிய கருப்பைக் கட்டிகள் (நார்க்கட்டிகள் - Fibroids) சினைப்பாதை அடைப்பு (Fallobian Tube Block) சூதகக் கட்டி (Cyst) நாளமில்லா சுரப்பிக் கோளாறுகள் (Hormonal Imbalance) போன்ற குறைபாடுகளுக்கு சித்த மருத்துவத்தின் மூலம் நல்ல பலன்கள் கிடைத்துள்ளது. அறுவை சிகிச்சையைத் தவிர்க்க முடிகிறது.

முடிவுரை

எவ்வித பக்க விளைவுகளுமின்றி குறைந்த செலவில் இயற்கையாக குழந்தைப்பேறு அடையச் செய்ய முடிகிறது. சோதனைக் குழாய் குழந்தை (Test Tube Baby) செயற்கைக் கருத்தரிப்பு (Artificial Insemination) போன்ற விலையுயர்ந்த சிகிச்சையைக் காட்டிலும் சித்த மருத்துவத்தின் மூலம் எளிதாகக் குழந்தைப் பேறடையச் செய்ய முடிகிறது. இவ்வுண்மையை இது போன்ற கருத்தரங்குகளின் மூலம் அனைவருக்கும் தெரியப்படுத்துதல் மிக அவசியம்.

சித்த மருத்துவத்தில் எய்ட்ஸ் நோய் தீர்வு காண மருந்துகள்

இராம. வேதநாயகம், எம்.ஏ.,

அறிமுகம்

எய்ட்ஸ் ஒரு தனி நோயல்ல, 39 நோய்கள் சேர்ந்தவை எனக் குறிப்பிடும் பதிணென் சித்தர் நாடிநூல் *அகஸ்தியர் காவியம்* பாடல் 36 முதல் 42 வரிகளில் குறிப்பிடப் படுகின்றன. மேலும் *திருமூலர் நாடி* சாஸ்திரம் பாடல் 1ல் கன்னிமயக்கத்தால் கண்டது மேகம் மற்றும் பாடல் 2 அம்மேக வகைகளையு குறிப்பிட்டுள்ளன.

1999ல் தமிழக அரசு நலத்துறை அமைச்சர் மாண்புமிகு ஆற்காடு வீராசாமி அவர்களால் வைரல் லோட் சோதனைக்கு சுமார் 6,00,000 ரூபாயும் மற்ற கருவிகள் வாங்க 20 லட்சமும் வழங்கப்பட்டன இந்நிதியின் மூலம் 10 எய்ட்ஸ் நோயாளிகளுக்கு சித்த மருந்துகள் வழங்கி எச்.ஐ.வீ. வைரல் லோட் சோதனை மூலம் வெற்றி காண நெஞ்சக நோய் மருத்துவமனை கண் காணிப்பாளர் பேரா. தெய்வநாயகம் அவர்கள் தலைமைத் தாங்கி வழிகாட்டலானார்.

இவ்வகை நிரந்தரமான வைரல் லோட் Less 50 இருப்பது உலக அளவில் வியப்பாகக் கருதப்படுகிறது.

எய்ட்ஸ் நோயாளி நெல்லூர் கோபாலிடம் கண்டறிந்த சோதனை விளக்கம்
இரத்த சோதனை

	நாட்கள்	RTCPCR	CD4cm	CD8
I	19.03.1999	36102	342	758
II	21.04.1999	7,50,000	539	1350
III	05.05.1999	8,90,000	352	909
IV	21.05.1999	5,40,000	503	1195
V	21.06.1999	400	491	1248
VI	24.12.1999	Less 50		
VII	22.01.2000	Less 50		
VIII	25.02.2000	Less 50		
IX	24.03.2000	Less 50		
X	24.05.2000	Less 50		

புத்தாயிரத்தில் சித்த மருந்துகள்

முனைவர் ச. பரிமளா, இணைப் பேராசிரியர் மற்றும் துறைத் தலைவர்,
தொல்லறிவியல் துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர் - 613 005.

அறிவியல் வளர்ச்சியை அளவுகோலாகக் கொண்டே எந்த ஒரு நாட்டின் உயர்வும் முன்னேற்றமும் கணக்கிடப்படுகின்றது. ஆனால், அந்நாட்டின் தொன்மையும் சிறப்பும் அதன் மரபுசார்ந்த பழங்கலைகளையும் பண்பாட்டுச் சின்னங்களையும் கொண்டே மதிப்பீடு செய்யப்படுகின்றன. அவ்வகையில், தமிழகத்தில் தனிப்பெரும் சிறப்புடன் விளங்கிவரும் சித்தமருத்துவம் இன்று அயல்நாட்டு ஆய்வாளர் தம் கவனத்தையும் கவர்ந்திருப்பது கண்கூடு. 'புத்தாயிரத்தில் சித்த மருந்துகள்' என்னும் இந்த ஆய்வுக் கட்டுரையில் 'சித்த மருத்துவம்' என்று கூறி சித்தமருத்துவர்கள் இன்று அளித்துவரும் சித்தமருந்துகள் குறித்தும்; பரம்பரை பரம்பரையாக சித்தமருந்துகளைத் தயாரித்துப் பயன்படுத்திவரும் சித்த மருத்துவர்கள் தயாரித்தளிக்கும் சித்த மருந்துகள் குறித்தும்; சித்தர் பெருமக்கள் செய்தளித்ததாக இன்று தொகுக்கப்பட்டுள்ள சித்தமருத்துவ நூல்கள் (குறிப்பாக குணபாடம் போன்ற பாடநூல்கள்) குறிப்பிடும் சித்தமருந்துகள் குறித்தும் முதற்கட்டமாக சில ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு தொகுத்தளிக்கப்பட்டுள்ளன. எடுத்துக்காட்டாக, 'குணபாடம்' என்னும் பாடநூலில் ஏறத்தாழ 43 வகையான தலைப்புகளில் சீவ வகுப்பு - மருந்துப் பொருள்கள் பட்டியலிட்டு அளிக்கப்பட்டுள்ளன. ஆனால், அவற்றில் பெரும்பாலானவை இன்று மருந்துப் பொருளாக விற்பனைக்கு வருவதில்லை. ஒரு சில மருந்துகள் பரம்பரை சித்த வைத்தியர்களால் தயாரித்தளிக்கப்பட்டு வருகின்றன. ஒரு சில மருந்துகள் வழக்கிலிருந்து முற்றிலும் மறைந்து கொண்டே வருகின்றன. எனவே, சித்தமருந்துகளின் உயர்வுக்கு இன்று சித்தமருத்துவக் கல்லூரிகள் ஆற்ற வேண்டிய அரும்பெரும் பணி இக்கட்டுரையில் கோடிட்டு காட்டப்பெறுகின்றது.

கொல்லிமலை மருத்துவத் தாவரங்கள் - ஓர் அறிவியல் பார்வை

முனைவர் ஆ. இராசேந்திரன், இணைப் பேராசிரியர்,
தொல்லறிவியல் துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர் - 613 005.

கொல்லிமலை, இயற்கைவளத்தைப் பொறுத்தவரையில் தமிழகத்தின் வளமான பகுதிகளில் ஒன்றாகும். இயற்கை நமக்களித்திருக்கும் வளங்களில் அரிதான மூலிகை வளம் இங்கு மிகுந்து காணப்படுகிறது. இங்கு வாழ்ந்த நமது முன்னோர்கள் இம்மலைக்காடுகளில் இயற்கையாக வளர்ந்து வந்த பல அரிய மருத்துவத் தாவரங்களின் இலை, வேர், தண்டு, பட்டை, பூ, காய், பழம் மற்றும் விதைகளைப் பயன்படுத்தி தங்கள் உடல்நலத்தைப் பேணிப் பாதுகாத்து வந்தனர். இம்மலையின் சிறப்பு சங்க இலக்கிய நூல்களாக நற்றிணை, குறுந்தொகை, புறநானூறு, பதிற்றுப்பத்து, ஐங்குறுநூறு முதலிய நூல்களில் பல புலவர்களால் பாடப்பட்டுள்ளது. பதினெண் சித்தர்களாலும் கொல்லிமலை சிறப்பித்துப் பாடப் பட்டுள்ளது. கொல்லிமலையில் **கோரக்கர்** என்னும் சித்தர் தம் மாணவர்களுடன் கூடி தவம் செய்ததாக சொல்லப்படுகிறது. இவர் தமது நூலான **'மலை வாகடம்'** என்னும் நூலில் இம்மலையில் காணப்பட்ட பல்வேறு மருத்துவத் தாவரங்களை வழக்குப் பெயரால் குறிப்பிட்டதோடு அவை கிடைக்கும் இடங்களைப் பற்றியும் தெளிவாக விவரித்துள்ளார். இம்மருத்துவத் தாவரங்கள் குறித்த செய்திகளை வெளியிட்டுள்ள சித்தமருத்துவ நூல்கள், கட்டுரை ஏடுகள், சுறுக்குகள் முதலியனவற்றை ஆராய்ந்தபோது, இன்றளவும் சித்தர்கள் வழங்கிய பெயர்களையே சித்தமருத்துவர்கள் கையாண்டு வருகின்றனர். நாகரீக வளர்ச்சியால் அரிய இம்மூலிகை மருத்துவம் புறக்கணிக்கப்பட்ட போதிலும், வளர்ந்த மற்றும் வளரும் நாடுகளிலும் மருத்துவத் தாவரங்களின் முக்கியத்துவம் கணிசமாக அதிகரித்து வருகிறது. எனவே, இம்மருத்துவத் தாவரங்களைப் பேணிக் காக்க வேண்டிய அவசரமும் அவசியமும் இப்பொழுது ஏற்பட்டுள்ளது. கொல்லிமலையில் குறிப்பிட்டுள்ள சில தாவரங்களின் தாவர இனத்தையும் அவற்றின் தாவரவியல் பெயர்களையும் விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

பாரம்பரிய மருத்துவத்தில் இந்திரக்கோபப் பூச்சி

ம. லலிதா இராஜேஸ்வரி, ஆய்வியல் நிறைஞர் பட்ட ஆய்வுமாணவி,
தொல்லறிவியல் துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர் - 613 005.

விலங்கு உலகதத்தில் (Animal Kingdom) மிகப்பெரும் எண்ணிக்கையில் காணப்படுபவை பூச்சிகளே! பல பூச்சிகளிடம் இருந்து பெறப்படும் பொருட்களை மனிதர்கள் உணவுப் பொருளாகவும், மருந்துப் பொருளாகவும் பயன்படுத்துகின்றனர். கருஞ்சிவப்பு நிறத்தில் காணப்படும் இந்திரக்கோபப் பூச்சி, வெல்வெட்டுபூச்சி, தம்பலப்பூச்சி, மேகத்தின் விந்து என்ற பெயர்களிலும் அழைக்கப்பெறும். சில பகுதிகளில் சப்பாத்திப்பூச்சியும், மின்மினியும், இந்திரக்கோபம் எனப்படுவதுண்டு. இந்திரக்கோபப் பூச்சியில் பல இனங்கள் உள்ளன. அவற்றுள் டிராம்பிடியம் கிகாஸ் (Trombidium gigas), டிராம்பிகுலா டெல்கெனிசிஸ் (Trombicula delhenesis), டிராம்பிகுலா அடம்னாலி (Trombicula automnali), டிராம்பிடியம் கிராண்டிசிமம் (Trombidium

grandissimum) போன்றவை குறிப்பிடத்தக்கவையாகும். (கலைக்களஞ்சியம், 1954). மாரிக்காலம் முடிந்தபின் மார்கழி, தை மாதங்களில் நல்ல சூரிய ஒளியுள்ள காலை நேரங்களில் புல்வெளியில் கருஞ்சிவப்பு நிறமுள்ள இப்பூச்சிகள் தென்படும். சில இந்திரக் கோபப் பூச்சிகள் செடிகளின் இலைகளுக்கும், மரப்பட்டைகளுக்கும் கீழே வாழும் அறுகால் பூச்சிகளையும், அதன் முட்டைகளையும் உண்டு வாழ்கின்றன (அறிவியல் களஞ்சியம், 1988). ஜிகர் (Gigar) எனப்படும் டிராம்பிகுலா ஆடம்னாலிஸ் (Trombicula automnalis) இரத்தத்தை உறிஞ்சும் ஒரு வெளிப்புற ஒட்டுண்ணியாகும். இந்திரக்கோபப் பூச்சிகள் உலகின் பல இடங்களில் காணப்பட்டாலும் குறிப்பாக தென்னிந்தியாவில் தான் இப்பூச்சிகள் குறிப்பிடும்படியாக தென்படுகின்றன. இந்தியப் பாரம்பரிய மருத்துவத்தில் இப்பூச்சிகள் பல நோய்களுக்கு மருந்தாகப் பயன்படுத்தப்படு கின்றன. சித்தமருத்துவ நூல்களில், இப்பூச்சியிலிருந்து தயாரிக்கப்படும் மருந்து கருமேகத்தையும், சுக்கில நட்டத்தையும், கபரோகத்தையும் நீக்குமென்றும், காயசித்தியை உண்டாக்குமென்றும், நரைதிரைகளை மாற்றுமென்றும், கக்குவான் நோயினின்று தற்காப்பதற்கும், அதனை நீக்குவதற்கும், முகவாதம், பாரிசவாதம், சூலைநோய் இவற்றைக் குணப்படுத்துவதற்கும், ஆண்தன்மையைப் பெருக்குவதற்கும் பயன்படுத்தப்படுகிறது என்றும் கூறப்பட்டுள்ளது. இப்பூச்சியைப் பயன்படுத்தித்தயாரிக்கப்படும் மருந்திற்கு இசிவகற்றும் செய்கையும், நரம்பிற்கு முறுக்கேற்கும் செய்கையும், தாதுவை விருத்தி செய்யும் செய்கையும் உண்டென்றும் கூறப்பட்டுள்ளது. இக்கட்டுரையின் வழி இந்திரக்கோபப் பூச்சியைப் பற்றியும் அதன் மருத்துவப் பயன்களைக் குறித்தும் அறியலாம். விலங்கியல், மருந்தியல் மற்றும் வேதியியல் வல்லுநர்களின் கூட்டுமுயற்சியால் மட்டுமே இப்பூச்சிகளிலிருந்து சிறப்பான மருந்துப் பொருட்களை தயாரித்திட இயலும்.

தேன்மெழுகின் மரபுசார் மருத்துவப் பயன்கள்

இரா. நந்தினி, ஆய்வியல் நிறைஞர் பட்ட மாணவி,
தொல்லறிவியல் துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர் - 613 005.

பொருளாதார மற்றும் மருத்துவரீதியாக தேனீக்கள் மிகவும் பயனுள்ள உயிரினமாக விளங்குகின்றன. இந்தியாவில் இராட்சத பாறைத் தேனீ, சிறியத் தேனீ, இந்தியச் தேனீ, கொசுத் தேனீ என்ற நான்கு வகைத் தேனீக்கள் உள்ளன. இத்தேனீக்கள் வசிக்கும் கூடுகளே தேனடைகளாகும். தேன் மெழுகைக் கொண்டு வேலைக்கார தேனீக்கள் இத்தேனடைகளைக் கட்டுகின்றன. இத்தேனீக்களின் வயிற்றுப்பகுதியில் உள்ள மெழுகுப் பைகளில் மெழுகுப் பட்டைகள் அடுக்கடுக்காய் அமைந்திருக்கும். இவற்றைப் பின்னங்காலிலுள்ள முள்ளின் உதவியால் கீறி எடுத்து, அவற்றை தன் தாடைகளால் நன்கு அரைத்து, தலைச்சுரப்பிகளின் (Cephalic glands) சுரப்புடன் நன்கு கலந்து ''புரோபோலிஸ்'' (Propolis) என்றழைக்கப்படும் பசை போன்ற பொருளைத் தயாரிக்கின்றது. இதன் உதவியால் தேனீக்கள் தேன்கூட்டினைக் கட்டுகின்றன. ''தேன்மெழுகு'' என்பது தேனடையிலிருந்து தேனை எடுத்தபின் கிடைக்கும் மஞ்சள் நிறமுடைய தேனின் மணம் கொண்ட பொருளாகும். இது நீரில் கரையாது. ஆனால் குளிர்ந்த ஆல்கஹாலில் கரையும். 63°C டிகிரியிலிருந்து 65°C டிகிரி வரை உருகும் நிலையும், 095 அடர்த்தியும் உடையது. சூடாக்கினால் பசையாகவும் குளிர்ந்தால் உடையும் தன்மையையும் அடையும். இயற்கையில் மெழுகுப் பொருள் தாதுக்களிலிருந்தும், காய்கறிகளில் இருந்தும், விலங்குகள் மற்றும் பூச்சிகளிலிருந்தும் எடுக்கப்பட்ட போதிலும் பூச்சிகளிலிருந்தும் கிடைக்கும் தேன்மெழுகே மரபுசார்ந்த மருத்துவத்தில் பெரும்பங்கு வகிக்கின்றது என்று கூறலாம். இத்தேன்மெழுகு இன்று பலவகைப்பட்ட அழகுசாதனப் பொருள்களைத் தயாரிக்கவும், மெருகு பூசுவதற்கும், துணிகளில் அச்சிடிக்கும் பலவழி முறைகளுக்கும், வார்ப்பட வேலைகளுக்கும், செயற்கை முறையில் தேன் பெட்டிகளில் தேனீக்கள் வளர்ப்போருக்கு தேன் அடைகளை உருவாக்குவதற்கும் பயன்படுகிறது. மரபுசார்ந்த மருத்துவ நூல்களில் தேன்மெழுகினால் பாரிச வாயு, விக்கம், வாதகோபம், கபநோய், சுக்கில நஷ்டம், சிலேஷமோஷடரோகம், தேள்விடம், பைசாசம், குஷ்டம், ஆகந்துக விரணம் முதலியன நீங்கும் என்றும் கூறப்பட்டுள்ளது. மேலும் தேன்மெழுகைக் கொண்டு தயாரிக்கப்படும் மெழுகுக்களிம்பு துஷ்ட விரணங்களுக்குப் போட நல்ல குணத்தைக் கொடுக்கும் என்றும்; மெழுகுத் தைலம் பக்கவாத நோய்க்கும், வெட்டுக்காயங்களுக்கும், தலைவாதம் மற்றும் சந்நிபாதத்திற்கு நல்ல மருந்தென்றும்; பிண்டத் தைலம், பித்த வெடிப்பிற்கும் முகத்தில் உண்டாகும் கரும்புள்ளிகளுக்குப் பயனளிக்கும் என்றும்; சந்திரகலாலேபத்தை மேலுக்குப் பூசத் தலைநோய், உடல்வலி, நீர்க்கோவை முதலியன நீங்குமென்றும் அறிந்து பாரம்பரிய மருத்துவர்கள் இன்றளவும் இம்மருந்துகளைப் பயன்படுத்தி வருகின்றனர். வாதநோய், விரணங்கள் மற்றும் கபநோய், வயிற்றுவலி, நெஞ்சுவலி, வறட்டு இருமல், குடுமையான வயிற்றுப் போக்கு, மூலம், எலும்புருக்கி நோய் போன்றவற்றிற்கும் எலும்புமுறிவு, சொறி, சிரங்கு போன்றவற்றால் ஏற்பட்ட புண்ணிற்கும் தேன் மெழுகு மருந்தாகப் பயன்படுவதாக அறிகிறோம். இக்கட்டுரையில் தேன்மெழுகு குறித்த அறிவியல் செய்திகளும் மருத்துவப் பயன்பாடுகளும் விளக்கப்படுகின்றன.

இந்திய மருத்துவத்தில் இறகுகளின் பயன்பாடுகள்

உ. அறிவுச்சுடர், முனைவர்பட்ட ஆய்வு மாணவி,
தொல்லறிவியல் துறை, தமிழப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர் - 613 005.

பறவைகள் அவற்றின் இறைச்சிக்காகவும், முட்டைகளுக்காகவும் மட்டுமன்றி செல்ல வளர்ப்புப் பிராணிகளாகவும் மனிதர்களுக்குப் பயன்பட்டு வருகின்றன. பறவைகளின் இறகுகளும் அழகுப் பொருள்களாகவும், அணிகலன்களாகவும் பயன்படுகின்றன. விலங்கின வகைப்பாட்டியலில் ஏவ்ஸ் (Aves) என்ற வகுப்பில் பறவைகள் வகைப் படுத்தப்பட்டுள்ளன. இவை ஆர்கியானியத்திஸ் (Archaeonithes), நியோக்னித்திஸ் (Neognithes) என்னும் இரு துணைவகுப்புகளாக பிரிக்கப்பட்டுள்ளன. நியோக்னித்திஸ் துணைவகுப்பில் தற்போதுள்ள அனைத்துப் பறவைகளும் அடங்கும். இத்துணைவகுப்பு, பேலியோக்நேதே (Palaeognathae), இம்பேனியே (Impannae), ஓடன்டோக்நேதே (Odontognathae), நியோக்னிதே (Neognithae) அல்லது கேரினேட்டேயே (Carinatae) என்னும் நான்கு முதன்மை வரிசைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. இறகுகள் என்பது பறவைகளின் மேற்புறத்தோல் அமைப்பு ஆகும். மிகவும் இலேசானவை. ஆனால் மிக வலுவானவையாகக் காணப்படுகின்றன. இது கெரட்டின் (Keratin) எனப்படும் கடினப் புரதத்தால் ஆனது. இறகுகளின் அமைப்பைப் பொறுத்து, குழல்தண்டு இறகு, இழை இறகு, உவருஇறகு என மூன்று வகையாக வகைப்படுத்தப்பட்டுள்ளது. பறவைகளின் இறகுகளில் மெலானின் (Melanin) கரோட்டினாய்டு (Carotinoid), சாந்தோப்பில் (Xanthophyll) ஆகிய மூன்றுவித நிறமிகள் காணப்படுகின்றன. இத்தகைய நிறமிகளின் அளவு மற்றும் வேதித்தன்மைகளுக்கேற்ப வெவ்வேறு வகை பறவைகளில் வெவ்வேறு நிற இறகுகள் காணப்படுகின்றன. பறவைகளின் இறகுகள் சிறந்த மருத்துவக் குணம் கொண்டவை எனப் பாரம்பரிய மருத்துவ நூல்கள் கூறுகின்றன. எண்ணிறந்த பறவையினங்கள் உள்ளபோதிலும் குறிப்பாக, கவுதாரி, காக்கை, காடை, கிளி, கூளி, கோட்டான், கோழி, பருந்து, மயில் ஆகிய பறவைகளின் இறகுகளிலிருந்து இறகுபற்பம் தயாரித்துப் பயன்படுத்திய செய்திகள் இன்று ஆய்வுக்கு உரியவையாக உள்ளன. பறவைகளின் இறகுகளைச் சுத்தி செய்து பாரம்பரிய முறைப்படி இறகு பற்பம் செய்து பயன்படுத்தினால், பித்தம் தொடர்பான நோய்கள், சேத்துமமிகுபிணி, காசம், குட்டம், பெருவியாதி, பீதி நோய், நடுக்கல், நபுஞ்சகம், பிரமிப்பு, வேர்வை, அடைப்பு நோய், பைத்தியம், குன்மம், சன்னி போன்ற பல நோய்கள் தீரும் என்று கூறப்பட்டுள்ளது. மேலும், பறவைகளின் இறக்கைச் சாம்பல், காதுவலி, சிறுநீரகம் சம்மந்தப்பட்ட வியாதிகள், தோலில் உண்டாகும் சொறி, கரப்பான் மற்றும் வெட்டுக்காயங்கள் ஆகியவற்றைக் குணப்படுத்தும் மருந்தாகப் பயன்படுகின்றது. தற்போது மயிலிறகாதி சூரணம் என்ற ஒரேயொரு மருந்து மட்டுமே மருந்தகங்களில் கிடைக்கின்றது. எனவே, 'இறகுகள்' குறித்து விலங்கியல் வல்லுநர்களும், வேதியல் மற்றும் மருந்தியல் வல்லுநர்களும் ஒருங்கிணைந்து ஆய்வுகள் செய்ய வேண்டிய அவசியம் இக்கட்டுரையில் விவாதிக்கப்படுகின்றது.

காளாஞ்சகப்படையில் அனுபவம் (சோரியாசிஸ்)

மரு. சு. ப.ச. இளமாறன், இ.சி.ம.அ., டி.எச்.எம்., டி.சி.ஒய்.,
அறந்தாங்கி - 614616.

சித்தர்கள் தாம் கண்ட ஆராய்ச்சியின் வெற்றியை மட்டுமே ஏட்டுச் சுவடிகளில் எழுதி வந்துள்ளார்கள். அதில் குறிப்பிட்ட அணுகு முறையில் நோய்க்கு மருந்தளித்தோம் என்றால் நோய் வெகு சீக்கிரம் குணமடைவதை காணலாம். சித்த மருத்துவத்தில் கண்டுபிடிக்கப்படாத நோயே கிடையாது. இம் மருத்துவத்தை சித்தர்கள் பரிபூரணமாக ஆராய்ச்சி செய்துவிட்டார்கள் என்று குறிப்பிடலாம். நாளடைவில் மக்களிடம் இம்மருத்துவத்தின் மீதுள்ள மோகம் குறையவே, இப்போது இம் மருத்துவத்தில் உள்ள சிறப்புகளை மீண்டும் நாம் வெளிப்படுத்தி வர வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறோம். சித்த மருத்துவத்தில் இனி ஒன்றும் கண்டுபிடிக்கத் தேவையில்லை. சித்தர்கள் கண்டு பிடித்துத் தந்த இவ்வரிய மருத்துவப் பொக்கிஷத்தை வெளிப்படுத்திக் காட்டினாலே சிறப்பானது. அந்த அடிப்படையில் தான் சோரியாசிஸ் என்ற காளாஞ்சகப்படை - செதில் உதிர்தல் நோய்க்கு ஆதிகாலத்திலேயே பல மூலிகை மருந்துகளை ஆராய்ச்சி செய்து நமக்கு தாரை வார்த்துள்ளனர். பொதுவாக தோல்நோய்களை குணப்படுத்த கசப்பான மருந்துகளை உள்ளுக்க அளிக்கும்போது வெகு சீக்கிரம் குணத்திற்கு வருவதை எனது அனுபவத்தில் பார்த்து வருகிறேன். இது முற்றிலும் உண்மையானதா? என்பதை ஆராய்ச்சி செய்ய வேண்டும். கசப்பான மூலிகை வகையில் ''நில வேம்பு'' முக்கிய பங்கு வகிக்கிறது. அதேபோல நாட்டுப்புற வழக்கில் இருக்கும் ''.இசங்கு'' மீண்டும் ஆராய்ச்சி செய்யப்படவேண்டிய ஒரு மூலிகை, இசங்கிற்கு வைரஸை எதிர்க்கும் ஆற்றலும், கீல்வாயு (ருமட்டாய்டு மூட்டு வலி) தோல்நோயை குணமாக்கும் ஆற்றலும் இருப்பதாக சித்த மருத்துவ நூல்களில் காணப்படுகிறது.

இந்தியாவின் பரம்பரைச் சொத்தும் பயனும்

எஸ். ஸ்டான்லி தாமஸ், இ.சி.ம.அ.,
அரசு சித்த மருத்துவக் கல்லூரி, பாளயங்கோட்டை.

தமிழர்களின் குருதியோடு குருதியாய் கலந்து உயிரோடு உயிராய் உறவாடிய மரங்களில் ஒன்று வேம்பு. பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு தோன்றி தமிழர்களின் நாகரிகத்தை தரணிக்குக் காட்டும் கண்ணாடியாக விளங்கும் சங்க இலக்கியங்களாகிய பின்வரும் நூல்களில் இதற்கான ஆதாரங்களைக் காணலாம்.

(1)அகநானூறு (2) புறநானூறு (3) குறுந்தொகை (4) ஐங்குறுநூறு (5) திவ்விய பிரபந்தம்

ஆதிகால விஞ்ஞானிகளாகிய சித்தர்கள் வேம்பின் சுவை கைப்பு, துவர்ப்பு என்று கண்டுபிடித்ததோடு உத்திரட்டாதி நட்சத்திரத்திற்குரிய மூலிகை என்றும் வகைப்படுத்தி உள்ளனர்.

மருந்துச் சத்துக்கள்

வேம்பில் முப்பத்துக்கும் மேற்பட்ட தாவர இரசாயனங்கள் உள்ளன. ராக்கெட்டிற்கான உந்து விசை மாற்று எரிபொருள் **'பைரோனிலின்'** பயிர்பாதுகாப்பு மருந்துகள் **நீம்ரிச்** போன்றவை மிக முக்கியமான மருந்துச் சத்துக்கள் ஆகும். வேப்பங் கொழுந்தில் கண்டுபிடிக்கப் பட்டுள்ள வைட்டமின் கண் நோயில் வேம்பின் பங்கைத் தெளிவாகக் கூறுகிறது. இலை, பட்டை, வேப்பெண்ணெய் போன்றவற்றைப் பகுப்பாய்வு செய்த போது பலவகை தாதுக்களும், அமிலங்களும் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

சுற்றுச் சூழலில் வேம்பு

சென்னையில் நடந்த ஆராய்ச்சி மற்றும் டாக்டர் சக்சேனாவின் கண்டுபிடிப்பு போன்றவை மாறிவிடும் நவீன காலத்திற்கு ஏற்ற மரம், வேம்பு என்று குறிப்பிடுகிறது.

வேளாண்மைத் துறையில் வேம்பு

நெற்பயிரையும், சணலையும் பூச்சிகளிலிருந்து பாதுகாப்பதும், எலிகளை ஒழிக்கும் வேம்புப்பட்டியில் வேம்பின் பயன்பாடும், சித்திக் - ஆலம் இவர்களின் கண்டுபிடிப்பும் வேளாண்மை துறையில் வேம்பின் பயன்பாட்டை குறிக்கிறது.

மருத்துவ ஆய்வு

குடற்புழுக்களை அழிப்பதன் மூலம் தோல்நோய்களைக் கட்டுப்படுத்துகிறது. வேப்பங்குச்சியால் பல் துலக்கும் கிராமப்புற மக்களுக்கு பயோரியா என்ற பல்நோய் அணுகாதது ஆய்வுக்குரியது. கணையத்தில் ஏற்படும் கிருமி தொற்றால் நீரிழிவு ஏற்படுகிறது என்ற புதிய கொள்கை அடிப்படையில் கிருமிகளை அழிக்கும் வேம்பை ஆய்வு செய்வது அவசியமாகிறது. வேப்பிலையை தொடர்ந்து உண்பவரின் உடலை பாம்பு விஷம் தாக்காது என்ற கிராம மக்களின் கூற்றும் ஆய்வுக்குரியதே. விந்தணுக்களின் MOTILITY திறனை குறைத்து தற்காலிக கருத்தடையை உண்டாக்குவதிலும் வேம்பு பயன்படுகிறது.

தங்கச்சத்து மூலிகை

ரெ. மாணிக்கவாசகம், இ.சி.ம.அ.,
அரசினர் சித்த மருத்துவக் கல்லூரி, பாளையங்கோட்டை.

முன்னுரை

இறைவன். படைப்பில் பல மூலிகைகள் உணவுப் பொருளாகவும், நச்சுக்களை நீக்கும் மருந்துப் பொருட்களாகவும் உள்ளன. உணவில் மூலிகைகளின் அவசியத்தையும், பயனையும் அறிந்து அன்றே பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே 'உணவே மருந்து மருந்தே உணவு' என்று சித்தர்கள் கூறியுள்ளனர். அத்தகைய கீரைவகைகளுள் ஒன்றான பொன்னாங்காணி பற்றி சில.

பொன்னாங்காணியின் தாவரவியல் பெயர் (*Alternanthera Sessilis*) இதற்கு, கொடுப்பை, சீதை என்ற பெயர்களும் உண்டு. பொன்னாங்காணி - பொன் + ஆம் + காண் + நீ என பிரித்து 'உடல் பொன்னாகும்' என்ற சித்தர்கள் விளக்கம் அளிக்கின்றனர்.

சத்துப் பொருட்கள்

இதில் குறிப்பாக தங்க சத்து அடங்கியுள்ளது. மேலும் இதில் புரதம், கொழுப்பு, நார்பொருட்கள், மாவு சத்துப் பொருட்கள், தாதுப் பொருட்கள். கால்சியம் பாஸ்பரஸ், இரும்பு, ரிபோபிளேவின், நியாசின், வைட்டமின் கிலோ கலோரி போன்ற பொருட்கள் அடங்கியுள்ளன. இதிலிருந்து 73 சி கலோரி சக்தி கிடைக்கிறது.

மருத்துவ பயன்கள்

இது சிறந்த காயகற்ப மூலிகை கற்பமுறைப்படி உண்டால் உடல் பொன்நிறமாகும். மேலும், வேக வைத்து உண்டால் கண்நோய்களும், சாறுடன் ஆட்டு பால் கலந்து உண்டு வர உடற்சூடும் குணமாகும். இதனை, பூண்டுடன் சமைத்து உண்ண மூலநோய் குணமாகும். இதன் நெய்யை உண்டு வர மேகம் சம்பந்தமான நோய்கள் குணமாகும். பொன்னாங்காணியில் உள்ள ஒரு வகையான ஈத்தரானது 'குன்ம எதிர்ப்பி'யாக (anti-ulcer) செயல்படுகிறது.

வர்ம மருத்துவ வகைகள்

மரு. டி. கண்ணன் ராஜாராம், இ.சி.ம.அ., சி.ஒய்.டி.,
மரு. பெலிஸிற்றால் ராஜாராம், பி.எஸ்.சி., எம்.பி.பி.எஸ்.,
வெய்ஸ் இந்திய மருத்துவ அறிவியல் மற்றும்
ஆராய்ச்சி நிறுவனம், கன்னியாகுமரி - 629 702.

வர்ம மருத்துவம் என்பது ஓர் இந்திய மருத்துவமாகும். இது சித்தா, ஆயுர்வேதா மருத்துவ முறைகளோடு தொடர்புடைய ஆனால் சற்று வித்தியாசமான மருத்துவமாகும். கன்னியாகுமரி மாவட்டத்தில் இன்றளவும் வளமாக வாழ்ந்துவரும் இம்மருத்துவத்தை கையாளும்போது மூன்றுவிதமான முறைகளில் மருத்துவத்தை மேற்கொள்வர். எல்லா விதமான நோய்களுக்கும் வர்ம பரிகாரம் பலனளிக்குமா? என்ற கேள்வி ஆய்வுக்கு உரியது. வர்ம தலங்கள் பாதிக்கப்படும் போது வாசிநிலையின் சரஓட்டம் பாதிக்கப் பட்டு பலவிதமான நோய் குறிகுணங்கள் தோன்றுகின்றன. அதைப்போல பல்வேறு காரணங்களால் உடலில் நோய் ஏற்படும்போதும், இந்த சர ஓட்டத்தில் மாறுதல் ஏற்பட்டு உடல் தனது இயல்பு நிலைய விட்டு பிறழ்கிறது. எனவே அந்நோயோடு தொடர்புடைய வர்ம தலங்களை சீர் செய்வதன் மூலம் அல்லது சற்று தூண்டிவிடுவதன் மூலம் அந்த நோயை குணப்படுத்துவதில் உதவ முடியும். எல்லா நோய்களுக்கும் வர்ம மருத்துவம் எனும் போது இதை ஒரு முக்கிய மருத்துவமாக எடுத்துக் கொள்ளாவிட்டாலும், ஓர் உப மருத்துவமாக கொள்ளலாம். வர்ம மருத்துவம் மேன்மேலும் வளர்ந்து மனிதகுலம் பயன்பெற வேண்டுமானால் இதை ஆய்வு செய்வது அவசியம். அதற்கு முதல் கட்டமாக வர்ம மருத்துவத்தை எல்லோரும் கற்றுக் கொள்வது அவசியம்.

ஒரு நஞ்சு மருந்தாகிறது - எட்டி

ப. கோகிலா, இ.சி.ம.அ.,
பாளையங்கோட்டை.

எட்டி நஞ்சாகினும் சுத்தித்து முறைப்படி தர நரம்புரமாக்கி நீர்மலம் போக்கி, அழுகலகற்றி செய்கைகளை உடையது. சன்னி, கடிவிடம், தாது நட்டம், கரப்பான் போக்கும். வளிக்குற்றத்தைத் தன்னிலைப்படுத்தும், நரம்புக்கு வன்மை தரும். வாந்தி கழிச்சல் உண்டாக்கும். விதையில் Strychnine, Brucine; நச்சு தன்மையற்ற Pseudostrychnine, ஆல்கலாய்டுகளும், loganin கிளைக்கோசைடும் உள்ளது. Strychnine, ரத்த சுற்றோட்ட மண்டலம், சுவாச மண்டலம், மைய நரம்பு மண்டலம் ஆகியவற்றை தூண்டுகிறது. எட்டிக் கொட்டைத் தூள் பக்கவாதம், உதறுவாதம், நரம்புகள் பற்றிய நோய்களைத் தீர்க்கும். அதிகமானால் மரணத்தை உண்டாக்கும். நஞ்சு முறிவாக நாவற்பட்டையை கொடுக்கத்தீரும்.

அமுக்கராச்சூரணம் - செயல்படும் விதம் - ஓர் ஆய்வு

மரு. வே. கணபதி எம்.டி. (சி), துறைத்தலைவர் – மூலிகை மருத்துவம்,
விவேகானந்தா கேந்திரம், இயற்கை வள அபிவிருத்தித் திட்டம், கன்னியாகுமரி.

முன்னுரை

உலக மருத்துவ முறைகளுள் நமது சித்த மருத்துவம அடிப்படைத் தத்துவங்களில் மிகவும் சிறந்து விளங்குகிறது. வாதம், வைத்தியம் யோகம், ஞானம் என்ற அடிப்படை முறைகளில், உயிரினங்களின் தோற்ற ஒடுக்கத்தையும், வாழ்நாள் நெறிமுறையும், நோயில்லா நெறிகளையும் தெளிவாக எடுத்துரைக்கிறது. நோய்களுக்கு சிகிச்சை என்று கூறும் போது, மணி, மந்திரம், அவிழ்தம் என்ற நிலைகளைக் கூறி, நோய்நிலை, காலநிலை, நோயாளியின் நிலை, மருந்தின் நிலை இவைகளை அனுசரித்து பல்வேறு மருத்துவ முறைகளை கூறி இருப்பது இதன் சிறப்பம்சமாகும்.

நோக்கம்

நமது மருத்துவத்தில் விஞ்ஞான ஆய்வின் வரைமுறையை உணர்த்தும் பொருட்டு, தத்துவங்களை உணர்ந்திருந்தாலும், இவை நடைமுறைக்கு வராதவை என்ற எண்ணத்தை மாற்றிடும் பொருட்டும், ஒவ்வொரு மருந்திலும் கூட முன்னோர்களின் பஞ்சபூத நுணுக்கத்தை இக்கட்டுரை விளக்குகிறது.

மைய ஆய்வு

சித்த மருத்துவர்கள் அனைவரும் பயன்படுத்துகிற கூட்டு மூலிகை மருந்து "*அமுக்கராச் சூரணமாகும்*" விஞ்ஞான ரீதியிலுள்ள செயல்பாடு பற்றியே கருத்திற் கொண்டு வருவதால் இம்மருந்தின் பூரணத் தன்மை மெல்ல மறைந்தும், நாம் அதை இழந்தும் வருகிறோம். இதனால் நூற்களில் தீரும் நோய்கள் என்று கூறப்பட்டு இருக்கிற நோய்களுக்கு யாரும் இம்மருந்தை பரிந்துரை செய்வதில்லை. ஆக சித்த மருந்துவ அடிப்படைத் தத்துவங்களை கொண்டு, அமுக்கிராச் சூரணத்தில் சேர்க்கப்படும் தனித்தனி மருந்தின் செயல்பாடு, கூட்டு மருந்தின் செயல்பாடு, துணை மருந்து, அனுபானத்துடன். சேர்த்து கொடுக்கும் போது இதன் செயல்பாடு, நோய்களை குணப்படுத்தும் விதம் - என்பது தொடர்பாக ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

விளக்க ஆய்வு

மேற்கண்ட மைய ஆய்வுக்கு பஞ்சபூத, முக்குற்ற, ஏழுவகைத் தாதுக்களின் நிலைகளை நூல் ஆதாரங்களுடனும், மருத்துவச் சோதனையுடனும் விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது.

ஆய்வு பயன்

அமுக்கிராச் சூரணத்தின் முழுதன்மையை உணர்ந்து சிறப்பாக கையாளவும், மிகுநம்பிக்கையுடன் நோய்களுக்கு வழங்கவும், அனுபான, துணை மருந்தினை நடைமுறைபடுத்தவும் வழி காணும்.

அதிக இரத்த அழுத்தம்

டி. ஆனந்த், இ.சி.ம.அ, அரசினர் சித்த மருத்துவக் கல்லூரி,
பாளையங்கோட்டை.

சித்த மருத்துவத்தில் அதிரத்த கொதிப்பானது இரத்த சூடு, இரத்த அமுக்கம், இரத்த மிகுதி, இரத்த அழுத்தம், இரத்த பெருக்கம், இரத்தாதிக்கம், நாடியிறுக்கம் என்ற வேறு பெயர்களால்அழைக்கப்படுகிறது. சித்த மருத்துவத்தில் அதிரத்த கொதிப்பானது முக்குற்றங்களில் (வாதம், பித்தம், கபம்), பித்தமானது தன்னளவில் மிகும்போது மற்ற குற்றங்களான வாதம் மற்றும் கபம் துணையோடு இந்நோயை உண்டாக்குகிறது. பித்தம் எவ்வாறு தன்னளவில் மிஞ்சுகிறது எனில் அதனை அதிகப்படுத்தும் உணவு மற்றும் செயல்களினால் என்பதுதான் தெளிவு. உணவு எங்ஙனம் பங்கு பெறுகிறது எனில் பஞ்சபூதங்களில் (மண், நீர், தீ, வாயு, ஆகாயம்) தீ பூதம் சேர்ப்புள்ள உப்பு , புளிப்பு, கார்ப்புஎன்னும் சுவையுள்ள உணவுப்பொருட்களை மிகுதியாக உண்பதால் பித்த குற்றமானது மிகுந்து இந்நோயை உண்டாக்குகிறது இந்நோயை ஆராயுமிடத்து பித்த வாதம் மிகுந்து காணப்படும்.

அதிக இரத்த அழுத்தத்திற்கான காரணங்கள்

நாடிகளின் உட்சுவர்களில் கொழுப்புப் பொருட்கள் படிதல், சுண்ணாம்புச் சத்து படிதல் போன்ற காரணங்களினால் நாடிச்சுவர் மீட்சித்தன்மை இழந்துவிடுகிறது. மேலும் நாடியின் உட்சுவரில் கொழுப்பு படிவதால் அதன் துளை குறுகலடைந்து அவை வன்மை இழக்கின்றன. இதனால் குருதிக் கட்டி (Thrombus) உருவாதால், குருதிக்குழல் உடைதல் மற்றும் அதி ரத்த கொதிப்பு ஏற்படுகிறது. இதனால் Atherosclerosis ஏற்பட்டு மாரடைப்பு ஏற்பட காரணமாக அமைகிறது. மலச்சிக்கல் கொழுப்பு, இறைச்சி வகைகள் அதிகமாக கொள்ளல், மது, புகையிலை, மாவுப்பொருட்கள்,மேக நோய்கள் பயம், மன உளைச்சல், கார உணவு போன்றவைகள் காரணமாக அமைகின்றன.

உப்பு இரத்த அழுத்தமும்

உப்பு எடையை அதிகரிப்பதில் பெரும்பங்கு வகிக்கிறது. ஏனெனில் உப்புதான் உடலில் நீரைத் தேக்கி வைக்கிறது. ஆகவே உணவில் உப்பைக் குறைத்து விட்டால், உடலில் உள்ள நீர் குறைகிறது.

இரத்த அழுத்தத்தை குறைக்கும் மூலிகைகள்

(a) நரிப்புகையிலையிலிருந்து பிரித்தெடுக்கப்படுகின்ற Cardiac glycoside, Digitoxin, Acetyl Digitoxin, Gitoxin, Digoxin இருதயத்தை நன்றாகச் சுருங்கி விரியச் செய்து மாரடைப்புக்கு முந்திய நல்ல நிலைக்கு கொண்டு வருகிறது.

(b) நரி வெங்காயத்திலுள்ள SCILLAREEN-A, SCILLAREEN-B ஆகிய கிளை கோசைடுகள் மிகவும் பாதுகாப்புள்ள இருதய கிளைகோசைடுகள் ஆகும்.

(c) சர்பகந்தாவில் உள்ள Rauvolfia, Reserpine ஆல்கலாய்டு அதிக செயல் திறன் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது.

(d) அதிக நார்த்தன்மை உள்ள வெந்தய விதைகளை உள்ளுக்குக் கொடுக்கும்போது LDL (LOWER DENSITY LIPOPROTEIN) மற்றும் VLDL (Very low Density Lipoprotein) குறிப்பிட்ட தக்க அளவில் குறைவதையும், HDL (High Density Lipoprotein) அளவு 10% உயர்வதையும் காணலாம்.

மருதம்பட்டையில் உள்ள கிளைக்கோசைடுகள் இருதய ஆஸ்துமாவை (Congestive Heart failure) குணப்படுத்தும் தன்மையைப் பெற்றிருக்கிறது.

புதிய மில்லேனியத்தில் பாரம்பரியம்

திருமதி. தெய்வமலர் ஜெயசங்கர்,
எம்.எஸ்.சி., பி.எட்., எம்.பில்., பி.ஜி.டி.சி.எ.,
உறையூர் அஞ்சல், திருச்சி மாவட்டம்.

''தொன்று நிகழ்ந்ததனைத்தும்
உணர்ந்திடும் சூழ்கலை வாணர்களும்
இவள் என்று பிறந்தவள்
என்றுணராத இயல்பினளாம்
எங்கள் தாய்''

என்ற பாரதியின் கருத்துக்கிணங்க பாரதத்தாயின் வயதைக் கணிக்க முடியாதது போல, சித்த மருத்துவமும் எப்போது தோன்றியது என்பதைக் கணிக்க இயலாது.

''பறவையைக் கண்டான்; விமானம்
படைத்தான்; எதிரொலி கேட்டான்
வானொலி படைத்தான் என்று

விஞ்ஞானம் ஒரு புறம் வளர்ந்தாலும், இன்னும் என்னவோ கிராமங்களிலும், வறுமைக் கோட்டில் பிறமும் மனிதர்களிடத்தும் மறையாமல் இருப்பது பாரம்பரியமிக்க, பண்டைக்காலம் தொட்டு, சித்தர்களின் ஏட்டில் பவனி வந்து இன்று நகர்ப்புற வாசிகளின் இல்லத்திலும் பவனி வரும் மருத்துவம் ''கைப்பக்குவம் உள்ள பாட்டி வைத்தியம்'' என்றால் மிகையாகது.

பலன் தரும் வீட்டு மருந்துகள்

மனிதனுடைய நலமான வாழ்வுக்குத் தேவை தூய காற்று, தூய தண்ணீர், நல்ல இருப்பிடம், உணவு இத்தனையும் உள்ள ஒரு குடும்பத்தில் அனைவரும் ஆரோக்கியமாக இருக்க முடியும். உலகில் மிக தெய்வீகமான ஒன்று தாய்மை. அந்நிலையை அடையும் போது ஒரு பெண் எவ்வாறு பராமரிக்கப்படுகின்றாள்? குழந்தை உருவான உடன் அவளுக்கு முறையான உணவு கொடுக்கப்படுகின்றது. பால், பழம் முட்டை முதலான ஊட்டச் சத்து மிக்கப் பொருட்கள் சேர்க்கப்படுகின்றன. கருவுற்ற முதல் மாதம் தொடங்கி, பத்து மாதங்களுக்கும் ஒவ்வொரு மாதமும் மூன்று நாட்களுக்கு கீழ்க்கண்ட மருந்துகள் முறைப்படி எடுத்துக் கொள்ள கரு பூரண சுகத்தோடு வளரும் என்று நம்பப்பட்டது.

முடிவுரை

பாரதத்தாயின் மடியிலே தோன்றி, தவழ்ந்து வரும் சித்த மருத்துவம் - இன்றைய பாட்டி வைத்தியம் ஏனோ பல இல்லங்களில் ஆக்ரமிப்பு செய்தாலும் அரசின் கவனத்தை ஈர்க்காதது என்னவோ கவலைக்குரியது. மலைகளும், நதிகளும் சூழ்ந்து இயற்கை வளம் வீசும் அன்னைக்கு அவளின் ஒரு பகுதிப் பிள்ளைகளாக பவனி வரும் சித்த மருத்துவர்கள் நம் அன்னைக்குச் சேவை செய்யத்தானே B.S.M.S. (Bachelor of Siddha Medicine and

Surgery) படித்துவிட்டு இருக்கிறார்கள். வெளிநாடுகள் சித்த மருத்துவத்துக்குத் தரும் அங்கீகாரத்தை நம் அரசு மட்டும் தராதது ஏனோ? கடல் கடந்து வந்து இங்கு வளா்ந்து வரும் மற்ற மருத்துவா்களின் மத்தியில் சித்த மருத்துவம் ஏனோ இரண்டாம் நிலையில் தான் உள்ளது. இந்த நிலை உணா்ந்து அரசு ஆவன செய்தால் இந்திய இயற்கை அன்னை தான் எழில் கொஞ்சும் கரங்களால் அனைவருக்கும் வாழ்த்துச் சொல்வாள் என்பதில் ஐயமில்லை!

''ஏட்டில் எழுதி வைத்தேன்
எழுதியதை சொல்லி வைத்தேன்''

என்பதோடு நின்று விடாமல் ஏட்டில் உள்ள எண்ணற்ற மருத்துவ விஷயங்கள் நாட்டின் மூலை முடுக்கெல்லாம் பரவி சித்த மருத்துவ உலகில் ஏற்படுத்தும் புரட்சி மக்களின் வளமான வாழ்க்கைக்கு இன்னும் வழி வகுக்க அனைவரும் பாடுபட வேண்டும்.

சத்துரு சரக்குகள் - ஓர் ஆய்வு

மரு. க. அன்பரசு, இ.சி.ம.அ.,
திருச்சிராப்பள்ளி 620 001.

முன்னுரை

சித்த மருத்துவத்தின் சிறப்புகளில் ஒன்று, இம்மருத்துவத்தில் உலோகம், பாடாணம், உபரசம், மற்றும் காரசாரச் சரக்குகளை அதிக அளவில் திறமையுடன், நுணுக்கமான வேதியியல் அடிப்படையில் கையாளுவது ஆகும். உலோகம், பாடாணம், உபரசம் மற்றும் காரசார சரக்குகளைச் சேர்த்து மருந்து செய்கையில் முக்கிய பங்கு வகிப்பது சத்துரு மித்துரு சரக்குகளின் செயல்பாடு ஆகும். சித்த மருத்துவத்தில் நவீன வேதியியல் கொள்கைகளைவிட சிறப்பு வாய்ந்த வகையில் வேதியியல் பொருட்கள் சேர்க்கப்பட்டு அவற்றின் செயல்பாடு குறித்தும் விவரிக்கப்பட்டுள்ளன.

முடிவுரை

சித்த மருத்துவத்தில் மருந்துகள் செய்யப்படும் பொழுதும், இரசவாதத்திலும் சத்துரு சரக்குகளும் பஞ்சபூதங்கள் அடிப்படையிலேயே சேர்கின்றன. சித்தர் நூல்களை ஆராய்ந்ததில் பஞ்சபூத சரக்குகளில் மண்பூத சரக்கை நீர்பூதமும், நீர் பூத சரக்கை தீ பூதமும், தீ பூத சரக்கை வாயு பூதமும், வாயு பூத சரக்கை ஆகாய பூதமும் மடிய வைப்பதால் அவையே முன்னுள்ளவைகளுக்கு சத்துரு சரக்குகள் என்பது தெளிவாகின்றது.

சித்தர்கள் - சத்தியமாய் விஞ்ஞானிகளே!

பா. விமல்தாஸ் இ.சி.ம.அ., ச. தமிழ்வாணன் இ.சி.ம.அ.,
அரசு சித்த மருத்துவக் கல்லூரி, பாளையங்கோட்டை.

சித்தர் பாதம் போற்றுவோம் - சித்த மருத்துவம் வளர்போம்
நுழைவாயில்

நவீன ஆராய்ச்சியின் மூலம் இன்று கண்டுணர்த்தப்படும் கருத்துக்கள் அனைத்தும், அக்காலத்தில் சித்தர்கள் தங்கள் பாடல்களில் மூலம் பல்வேறு இடங்களில் சூட்சுமமாக வெளிப்படுத்தி உள்ளனர். இதனை நாம் ஆராய்ந்து அறியும் போது, சித்தர்கள் நவீன அறிவியல் முன்னேறாத காலத்திலேயே விஞ்ஞானிகளை விடவும் சிறப்பாக விளங்கியுள்ளதை அறியலாம். இதற்கு கீழ்க்கண்ட சில கருத்துக்கள் சான்றாகும்.

சித்து நிலை

''சித்து'' (MYSTICISM) என்ற சொல்லுக்கும் மந்திரம் (OCCULTISM), தந்திரம் (ALCHEMY), வித்தை (MAGIC) என்ற சொல்லுக்கு தொடர்பு இல்லை. இதே கருத்தை "MYSTICISM IN ENGLISH" என்ற தற்கால நூல் உணர்த்துகிறது.

கழிவிலும் கண்டுபிடிப்பு

சித்தர்கள், சிறுநீரிலிருந்து ''அமுரி உப்பை'' அன்றே தயாரித்து மருந்துகளுக்கு பயன்படுத்தியுள்ளனர். இதே போல், சிகாகோவில் மனிதனின் சிறுநீரிலிருந்து ''யூரோகைனேஸ்'' (UROKINASE) என்ற உப்பினை பிரித்தெடுத்து மாரடைப்பை தீர்க்கும் மருந்தில் பயன்படுத்தியுள்ளார்கள்.

சித்த மருத்துகளின் தனிப்பெறும் கோட்பாடு

நமது சித்த மருத்துவத்தில் ஒப்பற்ற மூன்று கோட்பாடுகள் உள்ளன.

1.	ஒப்புறை	-	Drugs that excide the symptoms similar to those of the diseases
2.	எதிருறை	-	Drugs that act against the symptoms
3.	கலப்புறை	-	Combination of the above two.

மேற்கண்ட மூன்றில் ''எதிருறை'' என்ற கோட்பாட்டினை மட்டும் கொண்டு நவீன மருத்துவம் செயல்பட்டுக் கொண்டு இருக்கிறது.

வேதியியல் பகுப்பாய்வு

நவீன மருத்துவத்தில் இரு பொருட்களை சேர்த்து கூட்டுப் பொருளாகப் பெறும் ''CHEMICAL INCOMPATIBLE'' என்ற முறை உள்ளது. இதுவே சித்த மருத்துவத்தில்

சத்துரு (COMPARTIBLE DRUG)
மித்துரு (INCOMPATIBLE DRUG)

என்று அக்காலத்திலேயே உணர்த்தப்பட்டுள்ளது.

நோய்க்களிப்பில் சித்தர்களின் திறன்

நவீன மருத்துவத்தைப் போன்றே நோய்க் கணிக்கும் திறன், சற்று உற்று நோக்கும் போது நமது மருத்துவத்திலும் மறைந்து கிடப்பதை உணரலாம்.

1. Physical findings - நாடி, கண், மேனி, ஒலி, நாக்கு ஆய்வுகள்
2. Laboratory findings - மலம், சிறுநீர் ஆய்வுகள்

சித்தர் மருந்துகளின் மகத்துவங்கள்

உலகின் மற்ற மருத்துவத் துறைக்கு சவால் விடும் வண்ணம் அகமருந்து 32, புறமருந்து 32, உயிரிழப்பே அற்ற மருந்துகள் (Non expaired Medicines) போன்ற தெளிவான வரையறைகளை சித்தர்கள் அளித்துள்ளனர். தற்காலத்தில் நவீன மருத்துவர்கள் பயன்படுத்தும் 'பீச்சுக் குழல்' (Syringe) முறை, அக்காலத்திலேயே சித்தர்கள் ''குடோரி ஊன்றல்'' என்ற முறையில் பயன்படுத்தி உள்ளனர்.

கருத்துரை

சித்த மருத்துவத்தை நுணுக்கி ஆராய்ந்து, சித்தர்களின் அளவறிய கருத்துக்களை வெளி உலகிற்கு நாம் உணர்த்தினால், உலக சுகாதார நிறுவனம் (W.H.O.) கூறியது போல், சித்த மருத்துவம் திருப்புமுனையை பெறும் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

சித்த மருத்துவமும் மக்கள் இயக்கமும்

மரு. இரா. சதீஷ், இ.சி.ம.அ., மரு. இரா. பாலமுருகன், இ.சி.ம.அ.,

மக்கள் அனைவரும் நோயற்ற வாழ்வு வாழ வேண்டும் என்று விரும்புகின்றனர். அவ்வாறு நோய் வந்தாலும் நிரந்தர குணமடைய வேண்டும் என எதிர்பார்க்கின்றனர்.

நாட்டில் இன்று பல மருத்துவ முறைகள் இருப்பதால் எதை தேர்வு செய்வது என்பதில் குழப்பம் உள்ளது. இந்த குழப்பத்தைத் தவிர்க்க, ஒரே வழி அனுபவ கல்வியே! நமது பாரம்பரிய மூலிகை மருத்துவமே இன்றைய உலக மருத்துவ முறைகளுக்கெல்லாம் அடிப்படையானது. இந்தியாவிலிருந்து ஏராளமான மூலிகைகள் ஏற்றுமதியாவதும், அதே மூலிகைகளைக் கொண்டு மருந்து தயாரித்து மீண்டும் இங்கே விற்பனைக்கு வருவதும் ஒரு சான்று.

அது மட்டுமின்றி நாம் தொன்று தொட்டு பயன்படுத்தி வந்த மூலிகைகளான வேம்பு, கீழாநெல்லி, துளசி, நிலாவரை, அமுக்கரா, சதாவரி போன்ற மூலிகைகளும் வெளிநாட்டினர் காப்புரிமை பெற்று உலக அளவில் கொள்ளை இலாபம் ஈட்டுகிறார்கள்.

இதனால் நமக்கு ஒன்று மட்டும் தெளிவாகிறது. எந்த மருத்துவ முறையாக இருந்தாலும் அதற்கு அடிப்படை இயற்கையாய் விளையும் மூலிகைகளே!

வெளிநாடுகளில் *மருந்து* தயாரிக்க தேவையான அளவு மூலிகைகள் கிடைக்காததால், அதிலுள்ள இரசாயனப்பொருட்களை செயற்கையாய் தயாரிக்கப்பட்டு பயன்படுத்தப்படுகிறது. இதனால் சில பக்க விளைவுகள் ஏற்படும். அதாவது ஒரு நோய்க்கு மருந்து கொடுக்க மற்றொரு நோயினை அது ஏற்படுத்துகிறது.

இயற்கை மூலிகைகளை மட்டுமே பயன்படுத்தி நோய்க் கூட்டங்களை ஒழித்து மீண்டும் வராமல் தடுக்கும் நமது அபூர்வ மருத்துவத்தில் பக்க விளைவுகளுக்கு இடமே இல்லை!

இன்றைய விஞ்ஞான யுகத்தில் இச்சிறப்புமிக்க மூலிகை மருத்துவ முறையை தொடர மக்களிடம் போதிய ஆர்வம் இல்லை. ஆகவே நமது பாரம்பரிய மருத்துவத்தில் புதிய முறை ஒன்றை கையாண்டு இத்திட்டத்தை வெற்றிகரமாக செயல்படுத்த வேண்டும். *''வீட்டுக்கு வீடு வாசல் படி-வீட்டுக்கு வீடு மூலிகை தோட்டம்''* என்ற திருமதி. குத்சியா காந்தி I.A.S., அவர்களின் முழக்கத்திற்கு ஏற்ப வீடு தோறும் மூலிகை தோட்டம் அமைப்பதன் மூலம் மட்டுமே, மக்கள் தங்களுக்கு ஏற்படும் ஆரம்பநிலை நோய்களுக்கு அவர்களே மருத்துவம் செய்து கொள்ள முடியும்.

சுயசார்பு பசுமை மருத்துவம் எனும் சிறப்பான திட்டத்தின் மூலம்

நமது சித்த மருத்துவ முறையை இரண்டு வகைகளாக பிரிக்கலாம்

1. நோய்கள் வராமல் தடுக்கவும், வந்த நோய்களை ஆரம்பநிலையிலேயே நீக்கவும் சுயசார்பு பசுமை மருத்துவ முறையை குடும்பதலைவிகள் மூலமாக பரப்புவதை ஒரு வகையாகவும்
2. தீவிர நோய்களையும், நாட்பட்ட நோய்களையும் சித்த மருத்துவத்தில் தேர்ச்சி பெற்றவர்கள் பட்ட படிப்பு பயின்றவர்களை கொண்டு குணப்படுத்துவதுமாகும்.

இதுமட்டுமின்றி சித்த மருத்துவத்தை மக்கள் மருத்துவமாக மாற்று பெரும் பணியில் முழுமூச்சாக ஈடுபட்டு வருகிறது. *அதில் ஒன்று தான் மூலிகை வீட்டு தோட்டமும் சுயசர்பு பசுமை மருத்துவமும்* ஆகும்.

மூலிகை வீட்டு தோட்டமும் சுயசர்பு பசுமை மருத்துவம், மூலிகை மகளிர் மன்றம் ஆகிய இவ்உயரிய திட்டங்கள் மிகச்சிறந்த வெற்றியடைய தமிழ் மண்ணில் பிறந்த அனைவரும் ஆர்வம் கொண்டு இம் மண்ணின் மருத்துவம் தழைத்தோங்க பாடுபடவேண்டும்.

கரப்பான் - ஓர் ஆய்வு

மரு. ஆர். புவனேசுவரி, இ.சி.ம.அ.,
மரு. எல். வனிதா, இ.சி.ம.அ.,
குன்னத்தூர் - 638 103.

நாட்பட்ட கரப்பான் அதாவது குழந்தைப் பருவத்தில் இருந்து (6 மாதத்தில்) உடல் முழுவதும் கொப்புளங்கள் தோன்றி வெடித்து புண்ணாகி மருத்துவம் செய்து கொண்டால் குணமாவதும், பின் மீண்டும் உண்டாவதுமாக ஆய்வுக்கு எடுத்துக் கொண்ட நோயாளிக்கு 10 வயது வரைக்கும் இருந்து எளிமையான நம் சித்த மருந்துகளின் மூலம் குறுகிய காலத்தில், நீக்கப்பட்டது. மீண்டும் தொடர்ந்து வராமல் இருக்க, தொடர்ந்து சிறிது காலத்திற்கு மருத்துவம் மேற்கொள்ளப்பட்டது. குழந்தைகளில் கரப்பான் சிலவகை உணவுப் பொருட்களினாலேயே வருவாதகக் கூறப்பட்டது. இதே கரப்பான் நோய் பற்றி பயிற்சி மருத்துவராக திருப்பூர் தலைமை சித்த மருத்துவமனையில் பணியாற்றியபோது சில கரப்பான் நோயாளிகளை ஆய்வு நோக்கில் எடுத்துக் கொண்ட போது கீழ்கண்டவாறு தகவல்கள் பெறப்பட்டன. பயிற்சிக் காலத்தில் மருத்துவமனைக்கு வந்த நோயாளிகளில் 10% கரப்பான் நோயாளிகள். சாயத்தொழில், முலாம் பூசுதல் போன்ற தொழில்கள் மூலம் கரப்பான்நோய், வருவதாக சித்த மருத்துவம் (சிறப்பு) நூலில் கூறப்பட்டடுள்ளது. திருப்பூர் நகரில் மேற்கூறிய தொழில்கள் அதிகம் ...... நோயாளிகள் அதிகம். மேலும், பனியன் தொழிலில் அதிக தூசுகள் பணியாற்றுபவர்களை பாதித்து ஆஸ்தமா உருவாகி கரப்பானும் உண்டான வரலாறு ஒருவருக்கு உள்ளது. பரம்பரையாக நோய் உண்டாவது என்பதற்கு அக்கா, தங்கை, அம்மா மூவருக்கும் நோய் கண்ட வரலாறு உள்ளது. உணவு பழக்கவழக்கங்களில் இனிப்பு, புளிப்பு, உப்பு, காரம் அதிகம் விரும்பி உண்பவர்களுக்கு நோய் கண்ட வரலாறு உள்ளது. சிறுவயதில், கொய்யா, கருவாடு அதிகம் விரும்பி உண்பவர்களுக்கு கரப்பான் உண்டாகியது - 4 பேர். கையில் பெருவிரலுக்கு அருகில் பாம்பு கடித்து அதன்பிறகு நாட்பட கரப்பான் உருவானது - 1 பேர். கரப்பான் நோயாளிகளில் வறள் கரப்பான் 60% காணப்பட்டது. நோய் முற்றிய நிலையில் *ரச கந்தி மெழுகு*, குறிகுணங்கள் நீங்குதல் மற்றும் நோய் தீர்வை தந்தது. கரப்பான் தைலம் வெளிப் பிரயோகம் அனைவருக்கும் பயன் அளிக்கவில்லை. 3 பேருக்கு கொப்புளங்கள் அதிகரித்து படைகள் பரவுதல் அதிகரித்தது. இவர்களுக்கு *திரிபலாச் சூரணம்* வெளிப்பிரயோகம் நல்ல பலனை அளித்தது. நோய் குணமாகி பனியன் தொழிற்சாலைக்கு சென்று மீண்டும் கரப்பான் உருவானது - 1 பெண் நோயாளி.

நோய் எதிர்ப்பாற்றலை அளிக்கும் மூலிகைகள்

மரு. எஸ். கண்ணன், சென்னை - 33.

இன்றைய நாளில் மக்கள் மிக அதிக அளவில் நோய்வாய்ப்பட்டு இறக்கிறார்கள். இதற்கு காரணம் அவர்களின் மாறுபாடான உணவுமுறை பழக்கவழக்கங்கள், அசுத்தமான காற்று நீர், இரசாயனம் மற்றும் உரம் கலந்த உணவுப் பொருட்கள் போன்றவைகளினால் மக்களின் நோய் எதிர்ப்பாற்றல் நாளுக்கு நாள் குறைந்து கொண்டு வருவதே காரணமாகும். குறிப்பாக ஆஸ்துமா, வைரஸ், பாக்டீரியாக்களின் தாக்குதல், கேன்சர், அது தவிர தற்போதைய மிகமுக்கியமான AIDS, போன்றவைகளின் தாக்குதல் பல மடங்கு அதிகரித்துள்ளது. எய்ட்ஸ் கேன்சர் போன்ற நோய்களுக்கு பலவித பற்ப செந்துரங்கள் உள்ளது. ஆனால் அவற்றை பலரும் அறிந்து சுயமாக செய்து கொடுக்க இயலவில்லை. ஆனால் எளிதில் கிடைக்கக் கூடிய மூலிகைகள் பல உள்ளன. இவை மனித உடலில் நோய் எதிர்ப்பாற்றலை அளித்து மேற் கூறிய நோய்களை வரவிடாமல் தடுக்கும் அல்லது நோய் வந்தபின். எளிதில் போக்கச் செய்யும் (அ) நோயை எளிதில் கட்டுப்படுத்தும். சில மூலிகைகளை ஓரிரு செயல்களுக்கு மட்டுமே உரியது என கருதி அதற்கு மட்டுமே பயன்படுத்துவர். அமுக்கரா, வல்லாரை, கடுக்காய், நெல்லிக்காய், சீந்தில், அதிமதுரம் ஆனால் உண்மையில் இவற்றுக்கு வேறு அரிய பல செயல்கள் உள்ளன. உதாரணமாக அனைத்துமே நம் உடலில் நோய் எதிர்ப்பாற்றலை உண்டாக்கக் கூடியவை.

ஊரறிந்த ஊமத்தை

த. தியாகசுந்தரம், இ.சி.ம.அ.,
அரசு சித்த மருத்துவக் கல்லூரி, பாளையங்கோட்டை.

ஊமத்தை என்னும் குறுஞ்செடி இந்தியா முழுவதும் பரவலாக காணப்படும் ஒரு வகை மூலிகைச் செடி, பொதுவாக ஊமத்தையைப் பற்றி அறியாதார் யாரும் இலர். ஆனால் இதன் நன்மையை பற்றி அறிந்தவர் வெகு சிலரே. ஊமத்தை சித்த மருத்துவத்தில் பயன்படும் மருந்து வகைகளில் மிக முக்கிய இடத்தை வகிக்கிறது. ஊமத்தையின் இலை, பூ, காய், விதை ஆகிய அனைத்துமே மருந்து செய்யப் பயன்படுகிறது. இதிலிருந்து தயாரிக்கப்படும் 'தத்துராதி தைலம்' கீழ்வாயுவிற்கு நல்ல மருந்தாகும். ஊமத்தையின் இலைச்சாறு மற்றும் தேங்காய் எண்ணெய் கலந்து செய்யப்படும் 'மத்தன் எண்ணெய்' காதுவலி காதில் சீழ் வழிதல் ஆகியவற்றைக் குணமாக்குகிறது. இதன் இலை, மற்றும் அரிசிமாவு கொண்டு செய்யப்படும் 'ஊமத்தைக்களி' கட்டிகள் மற்றும் வீக்கம் குணமாக்கப் பயன்படுத்தப்படுகிறது. மிகச் சிறப்பாக ஊமத்தை இலை மற்றும் பூவை கொதித்து ஆவி வரும் அளவான நீரில் போட்டு அதிலிருந்து வரும் ஆவியை வாயால் சுவாசிக்க ஆஸ்துமா குணமாகும். ஊமத்தை இலை மற்றும் வெடியுப்பு கலந்து சிகரெட் புகைப்பதற்கு பயன்படுத்தப்படும். காகித உருளையினுள் வைத்து தீயில் பற்ற வைத்து புகைப்பிடிக்க ஆஸ்துமாவினால் வரும் இரைப்பு உடனடியாக குணமாகும். ஊமத்தையின் இலைகளை அளவில் வதக்கி வீக்கம் உள்ள இடங்களில் வைத்து கட்ட வீக்கம் கரையும், குழந்தைகளின் முழங்காலுக்குக் கீழே வரும் ஊரல் கரப்பானுக்குப் போட குணமாகும். ஊமத்தையின் நன்மையை இந்தியா மட்டுமின்றி உலக நாடுகளும் நன்கு பயன்படுத்துகின்றன. குறிப்பாக சீனா நாட்டினர் ஊமத்தையின் உபயோகத்தை நன்கு அறிந்துள்ளனர். அவர்கள் ஊமத்தம் பூவின் சத்தை தனியே பிரித்தெடுத்து உணர்ச்சிப் போக்கி மருந்தாகப் (Anesthetic) பயன்படுத்துகின்றனர். நாய்கடிப் புண்ணுக்கு சிறந்த மருந்து ஊமத்தையிலிருந்தே செய்யப்படுகிறது. அதுமட்டுமின்றி நஞ்சுமிக்க இந்த ஊமத்தை நஞ்சை நீக்கும் மருந்தாகவும் பயன்படுகிறது. இத்தகைய நன்மை மிகுந்த ஊமத்தையின் பயன்கள் ஊரறிந்த ஊமத்தை என்னும் தலைப்பில் கட்டுரையில் விளக்கமாக உள்ளன.

பிரம்ம விருட்சம்

கோ. அன்னலெட்சுமி, இ.சி.ம.அ., பெ. கவிதா, இ.சி.ம.அ.,
அரசு சித்த மருத்துவக் கல்லூரி, பாளையங்கோட்டை.

(MORINGA OLEIFERA)

''மறுப்பது உடல்நோய் மருந்தென லாகும்
மறுப்பது உளநோய் மருந்தெனச் சாலும்
மறுப்பது இனி நோய் வாரா திருக்க
மறுப்பது சாவை மருந்தெனலாமே'' - (திருமந்திரம்)

என்னும் திருமூலரின் வாக்கிற்கிணங்க, சித்த மருத்துவமானது உடல் மற்றும் உள்ளப் பிணிகளோடு, நோயை மீண்டும் வரவொட்டாமலும், சாக்காட்டை தடுக்கும் திறனும் வாய்ந்தது. படைத்தல், காத்தல், அழித்தல் என்னும் முத்தொழில்களில் படைத்தலானது முக்கியத்துவம் பெறுதல் போன்று, தாவர, தாது சங்கமப் பொருட்களை உள்ளடக்கிய சித்த மருத்துவத்தில், ஓரறிவுடைய தாவரங்கள் முக்கியத்துவம் பெறுகின்றன.

படைக்கும் தொழிலை புரிதலால் பிரம்ம விருட்சம் என்று அழைக்கப்படும், முருங்கையானது, இனிப்பு, புளிப்பு, கைப்பு சுவையைப் பெற்று, பித்தக்குற்றத்தினை சமப்படுத்துகிறது. முருங்கையின் வித்தானது போகம் பெருக்கியாய் லேகியங்களிலும், ரசாயனங்களிலும் சேர்க்கப்படினும் அதன் மற்றைய பகுதிகளும் மருத்துவத் துறையில் தக்க முறையில் பயன்படுகிறது. இதன் இலையிலும் பூக்களிலும் Estrogenic Substances அதிக அளவில் இருப்பதால் ருதுவுண்டாக்கியாக (Emmenagogue) செயல்படுகிறது. இதன் எல்லாப் பாகங்களிலும் Vitamin A & C மற்றும் Carbohydrate, Protein, fat, Ca, P, Fe, Cu இவை அதிக அளவில் இருப்பதால் உடலின் வளர்ச்சி மற்றும் வளர்சிதை மாற்றத்தை ஊக்கப்படுத்துகிறது. விதை எண்ணெய் இசிவகற்றி Antispasmodic செய்கையை உடையதால் Gout, Rheumatism த்தில் வெளிப்பிரயோகமாக பயன்படுகிறது. பட்டையில் உள்ள Pterygosperminக்கு Antibacterial & Antifungal Activity இருப்பதால் பட்டைச்சாற்றுடன் குப்பைமேனிச்சாறு சேர்த்து காய்ச்சி தடவ சொறி, கிரங்கு, கரப்பான் குணமாகும். இதன் பிஞ்சும் , காயும் பத்தியப் பொருளாய் பயன் படுகிறது. இதன் பட்டை சாற்றினை கொண்டு சுருக்கிட, சில உலோகங்களின் கட்டமைப்பினை மாற்றும் இயல்புடையது.

புத்தாயிரத்தில் ஆரம்ப சுகாதார பணியில் சித்த மருத்துவம்

மரு. அ. கிருபாகரன், இ.சி.ம.அ., கொண்டம் - காரியந்தல்,
திருவண்ணாமலை மாவட்டம் - 606 802.

புதிய நூற்றாண்டில் அடியெடுத்து வைக்கும் நாம் நம் மருத்துவத்துறை மக்களிடத்தில் மீண்டும் வரவேற்பு பெற்று பாமரன் முதல் பணக்காரன் வரை உள்ள எல்லா தட்டு மக்களையும் சென்றடைய வேண்டும். ஒருபுறம் சித்த மருந்துகளின் ஆராய்ச்சி நடைபெற்று கொண்டிருந்தாலும் மறுபுறம் நம் தமிழ் மருத்துவம் ஏன் இடைக்காலத்தில் வீழ்ச்சி அடைந்தது என்பதை ஆராய்ந்து பார்த்ததில் மக்கள் மருத்துவமாகிய நம் மருத்துவம் மக்களிடம் இருந்து அந்நிய கவர்ச்சி, அதாவது மேலைநாட்டு மோகங்களால் கொள்ளையடிக்கப்பட்டது. பழங்காலத்தில் நம்முடைய நோய்களை நம் மருத்துவர்களாகிய சித்த மருத்துவம் தீர்க்கவில்லையா? இவ்வாறு நாம் இழந்த பெருமையை மீண்டும் பெற மக்களிடத்தில் நம் மருத்துவம் மீண்டும் கொண்டு செல்ல வேண்டும். அப்பொழுதுதான் புத்தாயிரத்தில் சித்த மருத்துவ புரட்சி ஏற்படும் என்று எண்ணுகிறேன். தன்னார்வளர்களுக்கு பயிற்சி, மூலிகை கண்காட்சி மற்றும் விழிப்புணர் வு கலை நிகழ்ச்சிகள், பகுதி நேர மருத்துவமனை (Pheripheral Dyspensory), பள்ளி மருத்துவர் திட்டம் (School Health Programs) - ஆகிய திட்டங்கள் எல்லாம் எமது அனுபவமே ஆகும். எனவே மக்கள் மருத்துவமாகிய நம் தாய் மருத்துவம் மக்களிடத்தில் சென்றால் தான் அது நமக்கு கிடைத்த வெற்றியாகும் இதற்காக நாம் நன்கு செயல்பட்டால் புத்தாயிரத்தில் மீண்டும் ஒரு புரட்சி ஏற்பட வாய்ப்புண்டு என்று கருதுகிறேன்.

தூதுவேளை - காயகற்பம்

க. கீதா, இ.சி.ம.அ.,
அரசு சித்த மருத்துவக் கல்லூரி,
பாளையங்கோட்டை.

Solanum Trilobatum

காயகற்பம் என்பதில் காயம் என்பது உடலினையும், கற்பம் என்பது பிரம்மனுடைய ஆயுட் காலத்தையும் குறிப்பதாகும். அதாவது நரை, திரை, மூப்பு, பிணி ஆகியவற்றை அகற்றி நீண்ட நாட்கள் மனநலத்துடனும், உடல்நலத்துடனும் மனிதனை வாழவைக்கும் கற்ப மூலிகைகளுள் தூதுவேளை மிகச் சிறந்ததாகும்.

''திருக்குளத்தை நன்றாக்கித் தின்னுனவயே னல்ல
திருக்குளத்தைப் போலே திருந்துந் திருக்களத்தை
யெல்லா மிரவு வினை யென்னவருந் தூதுவளை
யெல்லா மிரவுமினியென்''.

இது கார்ப்புச் சுவையும், வெப்பத் தன்மையும் கொண்டுள்ளதால் உடலினுள் வெப்பத்தை உண்டாக்கி கபக் குற்றத்தைக் களையும். தூதுவேளை தலைவன் தலைவிக்கு தூதுவிடும் மாலைநேரத்தில் மலர்வதாலும் மாலையில் வரக்கூடிய சந்திராவர்த்த நோயாகிய கபநோய்களை போக்குவதாலும் இப்பெயரைப் பெறுகிறது.

''தூது பத்திரி யூண்சுவை யாக்கும் பூ
தாது வைத்தழைப் பித்திடும் காயது
வாத பித்த கபத்தையு மாற்று வேர்
ஓதும் வல்லிபன் நோயு மொழிக்குமே

இலை	:	உண்டிக்கு சுவை தரும்
பூ	:	ஆண்மையைப் பெருக்கும்
காய்	:	முக்குற்றங்களையும் போக்கும்
வேர், கொடி	:	இருமல், இரைப்பு நீக்கும்

தூதுவேளைக்கு கிருமிநாசினி பண்பு (Anti microbial Activity) இருப்பதால் நுண்ணுயிரிகளினால் ஏற்படும் சளியை நீக்குகிறது. இதில் பீட்டா சோலமரைன் (Beta Solamarine) என்ற கிளைக்கோ அல்கலாய்டு இருப்பதால் இது பூஞ்சை எதிர்ப்பி (Antifungal)ஆகவும் ஹெக்ஸேன் (Hexane) என்ற வேதிப் பொருள் இருப்பதால் தற்காலிக கருத்தடை (Local contraceptive) ஆகவும் செயல்படுகிறது. புரதம் 3.9% மாவுச்சத்து 4.6% கொழுப்புச் சத்து 0.7% கலோரி மதிப்பு 40 caloriel / 100 கிராம் ஆகவும் இருப்பதால் சிறந்த உடல் தேற்றியாகவும், ஆண்மை பெருக்கியாகவும் செயல்படுகிறது. கால்சியம், பாஸ்பரஸ் சத்துக்கள் இருப்பதால் எலும்பு மற்றும் மூளை வளர்ச்சிக்கு சிறந்ததாக செயல்படுகிறது.

மது மேகம் - மதுவினாலா? மாதுவினாலா? மனப்பிரச்சனையினாலா? மாறிவரும் வாழ்க்கை நெறியினாலா?

மரு. எஸ். இளங்கோ, இ.சி.ம.அ.,
உப்புலிபாளையம், கோவை.

ஆய்வின் நோக்கம்

தற்காலத்தில் உடலில் எந்த ஒரு சாதாரணத் தொந்தரவுக்காக மருத்துவரிடம் சென்றாலும் சுகர் இருக்கிறதா என்று கேட்கத் தவறுவதில்லை. இதுவரை சுகர் டெஸ்ட். பண்ணாவிடில் முதலில் சுகர் டெஸ்ட் பண்ணிவிட்டு வாருங்கள் அப்புறம் மருந்துகள் தருகிறேன் என்பார். ஏனென்றால் இந்நோயைத் தொடர்ந்து பல பாதிப்புகள் (Complications) ஏற்படுவது தான். அந்த அளவுக்கு உலகத்தையே பயமுறுத்திக் கொண்டிருக்கும் கொடிய வியாதிகளில் ஒன்று மதுமேகம் (Diabetes Mellitus). இந்நோய் வந்துவிட்டால் இதிலிருந்து மீளுவது என்பது எவ்வகை மருத்துவத்திலும் சாத்தியமில்லை என்பதே இன்றைய நிலை. அவ்வியாதியுடனே வாழ்ந்து வருகின்றனர். இந்நிலையை மாற்றி இத்தவறான கருத்தை மாற்றி இந்நோயாளர்களுக்கு மறுபிறவி அளிக்கும் வகையில் அன்றைய சித்தர் மெஞ்ஞான அறிவியலை நவீன உலகின் மொழியில் விளக்கம் கூறுவதே இக்கட்டுரையின் முக்கிய நோக்கமாகும்.

நடப்பு முறைகள்

(1) சித்த மருத்துவ அணுகுமுறை - பஞ்ச பூதக்கொள்கை (2) நவீன அணுகு முறை - அறிவியல் பார்வை (3) ஒப்பாய்வு (4) வாழ்க்கை முறையை மாற்றி அமைத்தல் (5) உணவு (6) யோகப் பயிற்சி

முக்கிய முடிவுகள்

(1)முதலில் பொதுவான உடல் நிலையில் (General Health) நல்ல முன்னேற்றம் ஏற்படுகிறது. (2)இந்நோயினால் வரும் பாதிப்புகளான உடல் மெலிவு (Emaciation), அதிமூத்திரம் (Polyurea) அதி தாகம், அதிகபசி, கைகால்வலி போன்றவற்றில் வியக்கத் தக்க மாற்றங்கள் காணப்படுகிறது. (4)ஓரிரு மாதங்கள் வரை இரத்தத்தில் சர்க்கரையின் அளவு குறைவதில்லை. சுமார் மாதங்களுக்குப் பிறகுதான் இரத்தத்தில் சர்க்கரையின் அளவு (Blood Glucose Level) இயல்பு நிலைக்கு (Normal) திரும்புகிறது. (5) இழக்கப்பட்ட தாதுக்களும், அதனால் உண்டாகும் பாதிப்புகளும் மீண்டும் புதுப்பிக்கப்படுகிறது.

முடிவுகள்

மருத்துவ உலகிற்கு சவாலாக இருக்கும் இவ்வியாதியை சித்தர் அடிப்படைத் தத்துவ அணுகு முறையில் இந்நோயை சவால்விட்டு குணப்படுத்த முடியும். அசாத்தியக் குறி குணங்கள் காணப்படும் நோயாளர்கள் இதற்கு விதிவிலக்கு. மற்ற மருத்துவ முறையில் இதைக் கட்டுப்பாட்டுக்குள் தான் வைக்க முடியும் என்ற கூற்றையே நாமும் நம்பாமல் சித்தர் மருத்துவ வழியில் ஆய்வு நோக்குடன் சிகிச்சை அளித்தால் நீரிழிவுக்கு ஓர் நிரந்தரத் தீர்வு உண்டு.

நெல்லி - உள்ளத்திலிருந்து

மரு. ச. தமிழ்வாணன், இ.சி.ம.அ.,
அரசு சித்த மருத்துவக் கல்லூரி, பாளையங்கோட்டை.

இயற்கை ஈன்றளித்த ஒப்பறிய செல்வங்களில் முதன்மையாக விளங்குபவை, இந்த மண்ணின் மாணிக்கங்களாக விளங்கும் மூலிகைகளேயாகும். இவற்றில் பண்டைய காலந்தொட்டே இன்று வரை சிறப்புப் பெற்று விளங்கும் நெல்லியின் இலக்கணத்தைக் காண்போம்.

முக்குற்றச்சமனி

நெல்லியில் இனிப்பு, புளிப்பு, துவர்ப்பு என முச்சுவைகள் இருப்பதால் முக்குற்றங்களையும் சமப்படுத்தும் சமனியாக விளங்கி, நோய்களை ஓட்டுகிறது.

கனியின் சத்துக்கள்

நெல்லிக்கு 'வைட்டமின் சி-ன் ராஜா' என்ற சிறப்புப் பெயரோடு அதிக நார்ச்சத்துள்ள 10 கனிகளில், நெல்லியும் ஒன்று என ஆய்வுகள் கூறுகின்றன. கனியிலுள்ள துணைக்காரணிகள் (Accessory factors) மற்றும் டானிக் அமிலம் (Tannic acid) வைட்ட்மின் சி-யை முழுமையாக உட்கிரகிக்கச் செய்கிறது.

வரலாற்றுச் சாதனை

1939-40 (Hissar) உறிஸ்ஸாரில், மக்களுக்கு வைட்டமின் சி-ன் குறையால் ஸ்கர்வி (Scurvy) நோய் ஏற்பட்ட போது, நெல்லிக் கனிணைக் கொடுத்து சரி செய்யப்பட்டதென வரலாறு கூறுகிறது.

உயிர்நீட்டும் காயகற்ப மூலிகை

நெல்லியிலுள்ள வைட்டமின் சி-யானது Superoxide redical மற்றும் hydroxyl radical போன்ற தனித்த அயனிகளை அழித்து Anti-oxidant ஆகச் செயல்பட்டு, நமது உடலை நரை, திரை, மூப்பிலிருந்து மீட்கின்றது.

சித்தர் கூற்றும், நவீன ஆராய்ச்சியும்

நெல்லியிலுள்ள "alcoholic extract" வயிற்றின் அமிலத் தன்மையைக் குறைத்து குன்மத்தை ஒழிப்பது (Gastric ulcer) கண்டறியப்பட்டுள்ளது. கனியின் சாற்றினை, எலுமிச்சம் பழச்சாற்றுடன் கலந்து கொடுக்க "Acute bacillary dysentary" குணமாவது ஆய்வில் உணர்த்தப்பட்டுள்ளது. மன உளைச்சலால் ஏற்படும் கைகள் உதறலுக்கு (Shivering) நெல்லிவற்றல் ஒப்பறிய மருந்தாகும். விதையின் மூலம் சுவாசகாசம் (Asthma), -மூச்சுக்குழல் தொற்று (Bronchitis), பித்த நீர் நோய்கள் (Billiousness) போன்றவை குணமாவது ஆராய்ச்சியில் தெரிய வந்துள்ளது.

பள்ளி பாடத்தில் சித்த மருத்துவம் - மூலிகை வளர்த்தல்

எ. பாலசுப்பரமணியன், பி.காம்., சேலம்.

கடந்த நூறாண்டு காலமாக, மனிதன், விஞ்ஞான தொழில்நுட்ப வளர்ச்சியில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டு வேகமாக முன்னேறிக் கொண்டிருக்கிறான். இத்துரித வேளையில் நோய்க்கு அருமருந்தான மூலிகைகளைப்பற்றி சிந்திக்கக்கூட நேரமில்லாமலும் , எந்த ஒரு உபாதையையும் சிறிதும் தாங்கிக்கொள்ள பொறுமையின்மையாலும் ஆங்கில மருந்துகளை, அதற்கெனவே 24 மணி நேரமும் திறந்து வைக்கப்பட்டுள்ள கடைகளிலிருந்து பெற்று தற்காலிக நிவாரணம் அடைவதோடல்லாமல், பக்க விளைவுகளால் ஈரல், சிறுநீரக மற்றும் இருதயம் போன்ற மிக முக்கிய உறுப்புகளில் கடுமையான பாதிப்புகளுக்கு உள்ளாகி மீண்டும் கடைசிவரை ஆங்கில மருந்துகளையே உண்டு மடிகிறார்கள் என்பது உள்ளங்கை நெல்லிக்கனி போன்ற உண்மை. மேற்சொன்ன தீமைகளை நன்குணர்ந்த சிந்தனையாளர் இயற்கையைச் சார்ந்த இயல்பான வாழ்வு பற்றிய விழிப்புணர்வு பெற்று சித்த வைத்தியத்தை நாடி, பலன் பல பெற்று, மூலிகைச் செடிகளை வளர்க்கும் கலையிலும் தங்களை உட்படுத்திக் கொண்டுள்ளார்கள் என்பது ஓர் மகிழ்ச்சியளிக்கும் திருப்புமுனையாகும். மத்திய மாநில அரசுகளும் சித்தவைத்திய மருத்துவர்களை உருவாக்கி, மருத்துவமனைகளில் சித்த வைத்தியப்பிரிவுகளை இணைத்து நோயுற்ற மக்களைக் காத்து வருவது மருத்துவத் துறையில் ஓர் மறுமலர்ச்சியாகும்.

நகரங்களில் வேகமாக ஓடிக்கொண்டிருக்கும் மனிதர்களிடம் மூலிகைகள் பற்றிச் சொன்னாலோ அல்லது அவர்கள் நோய்களுக்கு மூலிகைகளை மருந்தாகக் கொடுத்தாலோ அலட்சியத்தின் காரணமாக

ஏற்றுக்கொள்ள தயங்குகின்றனர். கிராமப்புற மக்களோ தங்கள் காலடியில் படர்ந்து கிடக்கும் அல்லது வேலிகளில் மண்டிக்கிடக்கும் மூலிகைச் செடிகளை அறியாமையின் காரணமாக விழிப்புணர்ச்சியின்றி ஒதுக்கி விடுகின்றனர். ‘இளமையில் கல்’ ‘ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா’ என்னும் வாக்குகளுக்கு இணங்க, ஆரம்ப கல்விப் பருவத்தில், தான் கற்கும் பாடங்களையும், அதன் நன்மைகளையும் அப்படியே ஏற்றுக் கொள்ளும் மனப்பக்குவம் மாணவர்களுக்கு உண்டு. ஆரம்ப பள்ளிகளிலேயே மாணவர்களுக்கு மூலிகைச் செடிகள் பற்றியும் அதன் மருத்துவ குண நலன்கள் பற்றியும் ஒரு பாடமாக சொல்லிக் கொடுக்கப்படவேண்டும் என்பது எனது உறுதியான கருத்து. சொல்லிக் கொடுப்பதோடல்லாமல் பள்ளித் தோட்டங்களில் மாணாக்கர்களே மூலிகைச் செடிகளை வளர்த்து, நோய்களுக்குப் பயன்படுத்தி பலனை அறியச் செய்தல் மிக முக்கியம். இப்பாட திட்டத்தின் வாயிலாக மாணாக்கர்கள், அவர்கள் வாழ்நாள் முழுக்க மூலிகைகளை பயன்படுத்தி கொள்வதோடு மற்றவர்களுக்கு அதன் பலனை நன்கு அறியச் செய்வார்கள் என உறுதியிட்டுக் கூறுகிறேன். மேற்கண்ட கருத்தின் அடிப்படையில், பள்ளித்தோட்டத்தில் பயிரிட உகந்த மூலிகைத்தாவரங்களை பத்துவகையாகப் பிரித்து வகைப்படுத்தி ஒவ்வொரு வகைக்கு உதாரணமாக ஐந்து மூலிகைகள் வீதம் ஐம்பது தாவரங்களின் தமிழ் பெயர், குடும்பப் பெயர், தாவரவியல் பெயர், வளர்ப்பு முறை, பயன்பாடுகள் இவற்றைக் குறிப்பிட்டு விவரித்துள்ளேன். இக்கட்டுரையில் குறிப்பிட்டுள்ள தாவரங்கள் அனைத்தும் நமது பள்ளித் தோட்டங்களில் நன்கு வளரக்கூடிய வெப்ப மண்டலப் பயிர்களாகும்.

உணவே மருந்து

கே. இராதா, இ.சி.ம.அ.,
அரசு சித்த மருத்துவக் கல்லூரி,
பாளையங்கோட்டை.

அறுஞ்சுவைகள்

அறுஞ்சுவை உணவாதிகளே நம் உயிர்த்தாதுவிற்கு ஆதாரமாய் உள்ளன என்பதை கீழ்க்கண்டவாறு அறியலாம். அதாவது.

வாத மிகுதியாகும் சுவைகள்	-	கார்ப்பு, கைப்பு, துவர்ப்பு
பித்த மிகுதியாகும் சுவைகள்	-	புளிப்பு, கார்ப்பு, உப்பு
கப மிகுதியாகும் சுவைகள்	-	இனிப்பு, புளிப்பு, உப்பு

எனவே இச்சுவைகளின் மிகு, குறை குணங்களே வாத, பித்த, கபத்தை அதிகரிக்கவோ குறைக்கவோ செய்யும். ஆகவே இவ்வுயிர்த் தாதுக்களின் மிகுதியையும், குறையையும் கண்டுபிடித்து அதன்படி உணவு கொள்ள வேண்டும். மிகினும் குறையினும் நோய் செய்யும் என்பதால் எவ்வுணவையும் அளவுடன் காலமறிந்து உண்ணவேண்டும். ஒழுக்கம் குறைந்தவர்களில் சிலரும் நெடுவாழ்க்கை உடையவராய் இருக்கின்றார்கள். அவர்களை ஆராய்ந்ததில் இரு வகையாக பிரிக்க முடிகிறது. ஒரு வகையினர் வறுமை முதலிய காரணத்தால் ஒழுக்கக்கேட்டில் அதிக தூரம் செல்ல முடியவில்லை. ஒழுக்கக் கேட்டைத் தடுக்க வறுமையே அவர்கட்கு அளவான உணவு முதலியவற்றால் நெடுவாழ்க்கைக்கு காரணமாயிற்று. இன்னொரு வகையினர் குறைவின்றி வசதி பெற்று, உழைப்பும் உடையவராய் இருக்கின்றனர். இவ்விரு பிரிவினர்க்கும் நாம் காணும் முக்கிய காரணம் அவர்கட்கு இன்னும் அசீரணம் ஏற்படவில்லை. முடிவாக உரைப்பது என்னவெனில் நாவதை அடக்கி அளவாக உணவே மருந்தாக உட்கொண்டால் வளமுடன் வாழ்ந்து நலம் பெறலாம்.

சித்தர்களும் ஆயுர்வேத சித்த மருத்துவ முறைகளும்

ஆர். தேவநாதன், பி.ஏ.எம்.எஸ்., ஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி
ஆயுள்வேதம் கல்லூரி, சென்னை,
மரு. ச. அரங்கராசன்ன பி.ஐ.எம்., கந்தர்வக்கோட்டை.

சித்தர்கள் வழிபாடு என்பது சித்த மருத்துவத்திலும், ஆயுர்வேத மருத்துவத்திலும் உள்ளது. இச்சித்தர்களை “நவநாத சித்தர்கள்” என்பார்கள். சமண சமயத்தில் “சித்தர்கள் வணக்கம்” உள்ளது. ஆயுர்வேத நூலாசிரியர்கள் பெயரால் பல சித்த மருத்துவ நூல்கள் உள்ளன. வால்மீகி நாடி சூத்திரம், வியாசர்நாடி, சுகர் நாடி, நந்தீசர் நிகண்டுவாகடம் என்பனவற்றைக் குறிப்பிடலாம். ஆயுர்வேத மருத்துவத்தில் இவர்களில் பெயர்களில் மருத்துவ நூல்கள் எதுவும் காணப்படவில்லை தமிழக திருக்கோவில்களில், தன்வந்தரி, கோரக்கர், அசுவினி தேவர்களுக்கு வழிபாடு நடத்தப்படுகிறது. சான்றாக திருக்கடையூர், வைத்தீஸ்வரன் கோவில் திருவரங்கம் முதலிய கோவில்களைக் கூறலாம். பிற்காலத்தில் ஆயுர்வேத மரபும், சித்த மருத்துவ மரபும், பின்பற்றப்பட்டன. ஆயுர்வேதம், வட இந்திய சித்தமரபு என்பதாக டி.பி. சட்டோபாத்தியா போன்ற அறிஞர்கள் கருதுகின்றார்கள். நாடிகளின் பெயர்கள், நோய்களின் பெயர்கள் மருந்துகளின் பெயர்கள் போன்ற பல இரு மருத்துவ முறைகளிலும் பொதுவாகக் காணப்படுகின்றன. இதனால் இரு மருத்துவ முறைகளும் ஒன்றோ என்ற ஐயம் பலரிடம் எழுகிறது. சித்த - ஆயுர்வேத மருத்துவத்திற்குள்ள ஒற்றுமையை நுணுக்கி ஆய்வு செய்ய வேண்டிய தேவை இன்றைய ஆய்வாளர்களுக்கு உள்ளது. இதற்கு இக்கட்டுரை ஒரு தூண்டுகோலாக அமையும் எனலாம்.

சித்தமருத்துவத்தில் உளநோய்கள் - ஒரு பார்வை

மரு. ச. அரங்கராசன், பி.ஐ.எம்., கந்தர்வக்கோட்டை.

விரைந்து செயல்படும் இந்த நூற்றாண்டில், மன இறுக்கம், மனத்தளர்ச்சி, மனச்சிதைவு, தாழ்வு மனப்பான்மை போன்ற சூழ்நிலைகளால், இன்று மனநோய் வல்லுநர்களை அதிகமாக அணுகும் மனப்பான்மை மக்களிடம் விரிவாகி உள்ளது. தமிழர்கள், உடலைப்பற்றி வருவது ''பிணி'' எனவும், மனத்தைப்பற்றி வருவது ''நோய்'' எனவும் அறிந்திருந்தார்கள். சங்க இலக்கியங்களில் வெறிநோய், பசலை என்ற உளநோய்கள் கூறப்பட்டுள்ளன. முறையான தமிழ் நாட்டு உளநோய் வரலாறு இது வரை எழுதப்படவில்லை. உளநோய்கள் பற்றி சித்தர் இலக்கியங்களிலுள்ள பகுதிகளும், மருத்துவ முறைகளும் ஒன்றாகத் தொகுத்து, உளநோய் மருத்துவ மூலிகைகளை அறிவியல் வழி ஆய்வு செய்தல் வேண்டும். அதற்கு வித்திடுவதே இக்கட்டுரையின் நோக்கம்.

வைத்திய முப்பு

மரு. பெ. வெங்கடேசுவரன், இ.சி.ம.அ.,
பட்ட மேற்படிப்பு முதலாம் ஆண்டு,
அரசு சித்த மருத்துவக் கல்லூரி, சென்னை-106.

முதலில் முப்பு என்ற சொல்லின் பொருள்களையும், அதன் பல்வேறு கோணங்களையும் அதன் உபயோகங்களையும் ஆய்ந்து முப்பு என்ற சொல்லின் உண்மையை அறிவோம். முப்பு என்ற சொல்லாய்வை பார்க்கும் போது அதன் பொருளாய்வும் இன்றியமையாதது. எனவே இரண்டை பற்றியும் சித்தர்கள், உரை ஆசிரியர்கள் கூறியதை கண்டு தெளிவோம். முப்பு என்பது மூவுப்புகளின் கூட்டு. அது மருவி முப்பூ என்றும் முப்பு என்றும் ஆகியதாக சொல்லப் படுகிறது. முப்பு - பொருள்களைப் பற்றி எடுத்தோமானால் இதனை மூன்று உப்புகளின் கூட்டு என்றும் - அந்த மூன்று உப்புகள் எவை எவை என பார்க்குமிடத்து பெருத்த குழப்பம் வருவது போல் தோன்றினாலும், பெரும்பாலான சித்தர்களும், வைத்திய பரம்பரையினரும் கூறுவது நீருப்பு, வாயுவப்பு, தீயுப்பு என்ற மூன்று அம்சம் வாய்ந்த உப்புகளின் கூட்டையே ஆகும். மேலும் பல்வேறு நூல்களை பார்க்கும் போது முப்பு என்ற சொல்லுக்கும் மூப்பூ என்ற சொல்லுக்கும் வேறுபாடு மறைமுகமாக உணர்த்தப்பட்டுள்ளது. அதனைப் பற்றி சிறிது ஆரோய்வோம்.

சித்தர் மணிமகுட இரகசியம்

மரு. ஆம்லின் ஜான் மைக்கேல், இ.சி.ம.அ.,
சையத் ஆய்வு அமைப்பகம், தமிழ்நாடு.

''வீறான அவுடதங்கள் முப்பு பட்டால்
விடுபட்டுப் போகுமடா பிணிகள் ஏது''

என்று முப்பினை சிறப்பிப்பதிலிருந்து இதனது மருத்துவத்தேவை நன்கு புலப்படும். ஆனால் சித்தர்களோ கடல், கங்கை, கருநெல்லி, கருங்கூர்மை, சலக்கூர்மை, மதிநீர், சஞ்சீவி, சாரம், மூலத்தின் சாரம், வெண்சாரை, தேன், பால், மது, சோனை, சோமன், வாமன், பசளை, அமுரியுப்பு, இந்துப்பு, சிவனுப்பு, வித்துஉப்பு, குமரி உப்பு, நமுரிஉப்பு, வெண்கம்பி உப்பு, காயசித்தி உப்பு, சங்காரகால உப்பு, உதிர்ந்த சடஉப்பு, தீச்சலம், சிவாம்பு, மூலவன்னி என்று பல்வேறு பரிபாஷைகளினால் குறிப்பிட்டிருப்பதனால் உண்மைக் கரு கிடையாது, மருந்தின் பலனும், வேகமும்,வீரியமும் குறைகின்றன. இங்ஙனம் இன்றைய காலத்தில் முப்பு என்பது வெறும் ஏட்டளவில் மட்டுமே உள்ளது என்பது வேதனைக்குரியது.

'காற்றை பிடிக்கும் கணக்கறிவாளருக்கு கூற்றை உதைக்கும் குறியதுவாமே' என்பது திருமந்திரம். பிராணனை தக்கவைக்கும் தன்மை அமுரியுப்புக்கு உண்டென்பதால் இதுவே காயசித்தி உப்பாம் சிவனுப்பு என்பது திண்ணம். அமுரியுப்பென்து மானிட சிறுநீர் உப்பே என்றும், அதுவே முப்பிற்கும், குருவிற்கும் சகல வாத வித்தகைக்கும் ஆதியென்றும், சில சித்தர்களது குறிப்புகளுடனும், நவீன ஆராய்ச்சி கருத்துகளுடனும், ஓர் ஆய்வுக்கட்டுரையாக மட்டும் இல்லாது கருத்துப் பரிமாற்றங்கள் செய்து நம்மை நாமே பலப்படுத்திக் கொள்ள விடுக்கப்படும் அழைப்பிதழாகவும் இதனை சமர்ப்பிக்கின்றேன்.

பாப்பிச் செடியின் நன்மையும் தீமையும்

ஆர். செந்தில் குமரன், இ.சி.ம.அ.,
அரசு சித்த மருத்துவக் கல்லூரி, பாளையங்கோட்டை.

பாப்பிச் செடியில் இருந்து, தீங்கற்ற மருத்துவக் குணம் கொண்ட கசகசாவும், ஆபத்து நிறைந்த அபினியும் கிடைக்கிறது. பாப்பிச்செடியின் விதை கசகசா. பாப்பிச் செடியின் காயை 4 முதல் 6 கீறல் கத்தியால் கீறுவதால் வடியும் பால் உலர்ந்த பின் பிசினாகி அபினி ஆகிறது. கசகசா விதையை மூடியுள்ள தோல் போஸ்த்தக்காய் ஓடு என்று அழைக்கப்படுகிறது.

பெயர் ஆராய்ச்சி

பாப்பவர் சோம்னிஃபெரம் (Papaver Semniferum) என்பது பாப்பிச் செடியின் தாவரவியல் பெயர். கெல்டிக் மொழியில் தாய்ப்பாலை பாபா என்று கூறுவார்கள். முலைக்காம்பையும் 'பாபா' என்று கூறுவார்கள். பால் வடிவதால் வரும் அபினி பாப்பி அல்லது பாபாவர் (Papaver) என்று ஆங்கிலப் பெயராயிற்று, என பிரிட்டிஷ் தாவரவியல் நிபுணர்கள் கூறுகிறார்கள். சோம்னிஃபெரம் என்ற வார்த்தைக்கு 'தூக்கம் தருவது' என்று லத்தீன் மொழியில் பொருள் இருக்கிறது.

கசகசாவின் ஊட்டச் சத்துக்கள்

கசகசாவில், புரதம், ஈதர், கச்சாநார், பாஸ்பரஸ், சுண்ணச்சத்து, இரும்பு, தயாமின், நிக்கோடினிக் அமிலம், ரிபோஃபிளேவின் போன்ற ஊட்டச்சத்துக்கள் உள்ளன.

கசகசாவின் மருத்துவப் பயன்

சரும நமைச்சல், வயிற்றுப் போக்கு, சலதோடம் அதிசாரம், விந்து நட்டம் நீங்கும். கசகசாவை ஊறவைத்து அரைத்துப் பிழந்தால் வரக்கூடிய பாலை சிறிது உட்கொண்டால், அது தாய்ப்பாலைச் சுரக்கச் செய்யும்.

கசகசாவின் வேறு உபயோகங்கள்

இதன் எண்ணெயில், பாதாம் எண்ணையின் ருசி இருக்கும். மாட்டுத் தீவனமாகவும், நிலத்திற்கு உரமாகவும், கூண்டுப் பறவைகளின் உணவாகவும் பயன்படுகிறது. ஓவியர்கள் வரையும் வர்ணம் செய்யப்படுகின்றது.

நம் நாட்டில் கசகசாவை மணம், ருசி தர உணவுப்பண்டங்களிலும் திண்பண்டங் களிலும் சேர்க்கிறார்கள்.

அபினி

இதில் மாலிக் அமிலம், டார்டாரிக் அமிலம், சிட்ரிக் அமிலம், அசிட்டிக் அமிலம் போன்ற முக்கிய அமிலங்கள் இருக்கிறது. 19-ம் நூற்றாண்டிற்குப் பிறகு அபினியில் 25 வகை ஆல்கலாய்டுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இதில் சக்தி மிக்கது மார்ஃபீன். அபாயம் நிறைந்த ஹெராயின் இதிலிருந்து தயாராகிறது. இது தவிர Codeine, Papaverine, Neopine, Thebaine, Protopine, Porphyroocine, Xanthaline போன்ற ஆல்கலாய்டுகள் அபினியில் உள்ளன. மார்ஃபீன் எனும் ஆல்கலாய்டு ஜெர்மனியின் 'செர்டர்னர்' என்பவரால் கண்டுபிடிக்கப்பட்டது. மார்ஃபீன் வலிநிவாரணியாகவும், தூக்கம் உண்டாக்கும் மருந்தாகவும் பயன்படுகிறது. மார்ஃபீன் மூளையிலுள்ள தலாமஸை சோர்வடையச் செய்கிறது. அபினி கால்நடை மருத்துவத்தில் வலி நிவாரணியாகவும் பயன்படுகிறது.

வல்லாரையின் மகத்துவம்

செ. சுகந்தி இ.சி.ம.அ., நான்காம் ஆண்டு,
அரசு சித்த மருத்துவ கல்லூரி, பாளையங்கோட்டை.

சித்த மருத்துவம் என்பது மனத்திற்கும், உடலுக்கும் மருத்துவம் செய்வதாகும். இச்சித்த மருத்துவத்தில் கூறப்பட்டுள்ள மருந்துகள் பல. அதில் எண்ணற்ற மூலிகைகளும் அடங்கும். அவற்றில் ஒன்று தான் வல்லாரை.

வல்லாரைக்கு ஒவ்வொரு மொழியிலம் பல வேறு பெயர்கள் இருக்கின்றது. ஒவ்வொன்றையும் பிரித்து பார்த்து பொருள் கொண்டால் பல செய்திகள் கிடைக்கும்.

உம் : தமிழில் - வல்லாரைக்கு வேறு பெயர்
மண்டூக பரணி - தவளைக்குக் கூட அறிவை தர வல்லது.

இது ஈரதரையில் படர்ந்து பயிராகிற ஒரு வகை. இதன் சமூலம் முழுவதும் மருத்துவத்திற்கு பயன்படுகிறது. இதன் இலை துவர்ப்பு, கைப்பு சுவைகளையுடையது. ஆதலால்

வளியை மிகுவிக்கும், பித்தத்தைச் சமப்படுத்தும், கபத்தைச் சமப்படுத்தும் ஆயினும் இது வாத நோய்க்கான மருந்துகளில் சேர்க்கப்படுகிறது.

ஒவ்வொரு மருத்துவத்திலும் கூறப்படும் வல்லாரையின் செய்கைகளில் பல ஒன்றாக இருக்கிறது. அவை,

1. மூளையைப் பலப்படுத்தும், நினைவாற்றலை வளர்க்கும்
2. சரும நோயைப் போக்கும்
3. குருதியைத் தூய்மை செய்யும்
4. நரம்பு சம்பந்தமான நோய்களைப் போக்கும்
5. நச்சுக்களைக் களைகின்றது.

வல்லாரையில் உள்ளடங்கிய பொருள்களில்

1. Asiaticoside - glycoside – குஷ்டராஷனி செய்கையுடையது
2. Oxy asiaticoiside, Asiaticoside – இளைப்பு நோயை குணமாக்கும்.
3. Ascorbic acid – வாய்புண, பல்ஈறு புண்கள், புண்கள் இவைகளை குணமாக்கும்
4. Pectin – வயிற்றிழிவு, இரத்தக் கடுப்பு இவைகளை குணமாக்கும்

இலக்கியத்தில், வல்லாரை வாய்புண், கழிச்சல், குருதிக் கழிச்சல் இவைகளால் உண்டாகும் வயிற்று கடுப்பு ஆகியவை தீரும் என தேரையர் வெண்பா கூறுகிறது.

வல்லாரையை பசுவின் பாலில் வேகவைத்து உலர்த்தி எடுத்துக் கொள்ள வேண்டும். வறட்சியுண்டாக்கி செய்கையைப் பெற்றிருப்பதால் இதனை கொழுப்புச் சத்துள்ள பருப்பு வகைகள் (உம். முந்திரிபருப்பு, சாராபருப்பு, பிஸ்தா பருப்பு) இவைகளுடன் உண்ணவேண்டும். இதை உட்கொள்ளும் போது விதிமுறைகள் பலவற்றை கடைப்பிடிக்க வேண்டும்.

வல்லாரையை தனி மருந்தாக ‘கற்பஉசிதம்’ என்ற தலைப்பின் கீழ் கூறப்பட்ட முறையில் உண்ண குஷ்டம் தீரும்.

இதையே நம் அறிஞர்கள் Asiaticoside என்றும் glycoside இச்செய்கையை செய்கிறது என்று ஆராய்ந்து அறிந்துள்ளனர்.

வல்லாரையை அதற்காக கூறப்பட்டுள்ள கற்ப முறைப்படி உண்டால் நோய்களிடம் இருந்து உடலைக் காத்து மூளையை வளர்த்து நினைவாற்றலை பெருக்கி நம்மை வல்லாவராய் திகழச் செய்யும் சக்தியுடையது வல்லாரை.

உடல் நலத்தையும், மனதின் ஆற்றலையும் பெருக்கும் தன்மையுள்ள வல்லாரையை பயன்படுத்தினால் வலிமையுள்ளவர்களாகவும், வல்லமையுள்ளவர்களாகவும் நம் சந்ததியர்கள் திகழ்வார்கள் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

BASIC PRINCIPLES OF SIDDHA SYSTEM OF MEDICINE AND ITS CLINICAL APPLICATION

GALEUN A. JEYANTHI,
GALEUN V. JASMINE RANJANA,
V B.S.M.S., PALAYAMKOTTAI.

"அண்டமும், பிண்டமும் அறிந்தோன் சித்தன்"

Siddhars have considered the structure of human body as a miniature world. Besides this principle the 3 humours, Panchabootha and Arusuvai which are closely inter related, form the basic concepts of the siddha system. These factors are applied clinically to diagnose and cure the ailments.

The basic constituents of Vadha, Pitha, Kabha have multiple significance & are symbolical in terms. When they grow "incensed" or "inforiated" they cause havoc in the body by invading the domain of the others. The condition of these three humours can be felt by the pulse.

Some Illustrations of Vadha, Pitha & Kabha

Sl. No.	Context	Particulars	Vadha	Pitha	Kabha
1.	Gross Body	Head, chest & abdomen arms and legs	Head	Chest & Abdomen	Arms & Legs
2.	Systems	Nervous, digestive & circulatory muscular	Nervous	Digestive & circulatory	Muscles
3.	Function	Mind, vital, Physical	Mind	Vital	Physical
4.	Cell	Nucleus, Protoplasm body of the cell	Nucleus	Protoplasm	Body of the cell
5.	Humours	Air, gastric, juice, saliva	Air	Gastric Juice	Saliva
6.	Classification	Painfull as paralytic inflammatory, non-inflammatory	Painful or paralytic	Inflammatory	Non-inflammatory
7.	Causes	Lack of relaxation, Low vitality, accumulation of toxic matter	Lack of relaxation	Low vitality	Accumu-lation of toxic matter
8.	Treatment	Relaxation stimulation, Elimination	Relaxation	Stimulation	Elimination

According to Thirumoolar's work on pulse the word `pulse' means the beating of an artery felt with the tip of the finger or fingers at the wrist, rate and character indicater a person's condition of health.

Vadha Pitha, Kabha are the three kinds of pulse felt in the same artery (radial), Guru nadi and Bootha nadi are not observed in practice for they, Guru more difficult to understand. It is secret that cannot be learnt without the aid of the spiritual Guru or Yogi.

The fundamental principles of pulse

Humour	Vital air	Origin	Region	Move-ments	Finger	Degree of force
Wind	Apana	Faeces	Navel	Fawl	Fore-finger	1
Bile	Prana	Water	Chest	Frag	Mid-finger	
Phlegm	Samana	Semen	Head	Snake	Ring-finger	

The Science of pulse is not doubt based on the theory of `Muthodam' & So, it cannot be easily understood, unless one is thoroughly acquainted with the working of 3 humours in the human system.

Conclusion

"Besides relieving from pain; there is no other wealth to gain".

So let us do our best, and make our Siddha system, a "marvellous remedy" for the people in this new millennium.

MASSAGE THERAPY - தொக்கண மருத்துவம்

K.Senthil,

IV - B.S.M.S., G.S.M.C., Chennai - 106.

Massage provides nourishment to the body and produces increased lymph circulation which maintains fluid balance of the body. Massaging with oils play a vital role in therapeutic line of treatment. The vital points or varma points has anatomical significance and systematic techniques are applied in massage therapy for successful relief and recovery.

PRANAYAMA IN RESPIRATORY INSUFFICIENCY

Dr.R.S.Ramaswamy, M.D. (S) Lecturer,
Physiology, Special Medicine & Yoga,
Government Siddha Medical College,
Palayamkottai - 627 002.

The paper deals elaborately with the different types of abnormalities and diseases that lead to respiratory insufficiency. It also explains clearly about the positive role of Pranayama (the scientific art of having control over breathing), in the treatment of diseases or abnormalities causing respiratory insufficiency. Several Pranayama techniques also have been described.

EFFECTS OF 3 TYPES OF PRANAYAMA IN OBESE PATIENTS

Dr.K.P.Regina Kabilan, B.S.M.S.,D.Y.T.,
Vivekananda Yoga Research Foundation,
Bangalore.

This study was part of the **'STRESS PROJECT'** Conducted by V.K.Yoga Research Foundation.

AIM AND OBJECTIVE

The aim of the study is the composition of Pranayama (nostril breathing) namely SAV (Suryanuloma Viloma), CAV (Chandranuloma Viloma) and NS (Nadi Sudhi) as a component of IAYT in obesity.

DESIGN OF THE STUDY

Patients would be assessed on day one of the inpatient stay and more on day fourteen of their stay. This study would also attempt an investigation of the Psychological effects of certain Yoga Practices. We have divided all the patients in to 3 groups by giving them different Pranayama SAV (right nostril breathing), CAV (left nostril breathing), NS (alternate nostril breathing). CAV and SAV groups practices 27 rounds 4 times/day and NS group practice 12 rounds 4 times/day for the same 14 days. While other IAYT practices have been kept same for all the 3 group.

The grouping according to Pranayama has been done to study the effect of these Pranayama on Psychosomatic disease. The daily attendance of different Pranayama has been recorded carefully. Breathing techniques has been taught by yoga instructors.

RESULTS

The data of obesity shows significant changes in R.R, PSY-1, PSY-2, Weight, BMI, Fat%, Calorie intake, Cholesterol, VLDL - In Practice of NS, PSY-1, PSY-2, BMI, Fat%, calorie intake - In Practice of CAV. Weight, Fat%, Calorie intake, PSY-2 -In practice of SAV.

CONCLUSION

All the 3 types of Pranayama shows better results. But comparatively NS shows better improvement and significant values. After detailed discussions 'NADI SUDHI' is concluded as more beneficial for obesity Patients. But we cannot come to a final conclusion because number of cases are less. So more studies are being carried out on the above area.

ANTI - MICROBIAL ACTIVITY OF ADUTHEEENDAPALAI (*ARISTOLOCHIA BRACTEOLATA LAM*)

Bharatha Jothi, P. and C. Bhaskaran,
Department of Siddha Medicine, Faculty of Sciences, Tamil University, Thanjavur - 613 001.
*P.G. and Research Department of Botany and Microbiology;
A.V.V.M. Sri Pushpam College (Autonomous), Poondi - 613 503.

The extract of different concentrations of an Indian medicinal plant, Adutheendapalai (*Aristolochia bracteolata Lam*) chooranam was tested on *Streptococcus* species, *Staphylococcus aureus, Escherichia coli* and *Pseudomonas flavus*. The activity varied with concentration of the drug with microbial species. All the test organisms were susceptible to the drug (Adutheendapalai chooranam). The drug was more effective to the pathogenic forms Streptococcus species followed by *Staphylococcus aureus* than *E.coli* and *P.flavus*. The root extract was more effectiveness than leaf extract.

INVITRO ANTI-TUBERCULAR ACTIVITY OF IMBURAL (OLDENLANDIA UMBELLATA)

A.Balasubramaniam* R.Vasanthakumari* K.Jagannath* Saradha vasanth @

* Institute of Thoracic Medicine, Chetpet, Chennai - 600 031.
* Captain Srinivasa Murthi Drug Research Institute for Ayurveda, Arumbakkam, Chennai - 600 106.

OBJECTIVES OF THE STUDY

The plant Oldenlandia Umbellata Linn. Known as Imbural in Tamil is used in the Siddha system of medicine in the treatment of Tuberculosis, Haemoptysis and other respiratory tract infections.

i) To study the invitro activity of successive chloroform and methanol extracts of the roots of the plant against Mycobacterium tuberculosis.

ii) To test the activity of Alizarin (invitro), one of the major anthraquinones present in the plant against the same bacterium.

IMMUNE ENHANCING EFFICIENCY OF VALAIRASA CHENDOORAM IN A VERTEBRATE MODEL

G.Subash Chandran, A.G.Murugesan, M.I.Zahir Hussain, S.Ramasamy and N.Sukumaran
Sri.Nandhessar Siddha Research Trust, Pappankulam, Tirunelveli Dt.627 423.
Manonmaniam Sundaranar University, Sri.Paramakalyani Centre for Environmental Science, Alwarkurichi 627 412, India.

Most of the opportunistic diseases can be overcome by a person whose immune mechanism is intact. Slums of India which are already a habitat of infectious diseases is going to play major role in spreading the disease. The immunity related diseases are a fast growing health problems faced by man from ancient times. After the report of AIDS during the eighties the immune diseases are of great concern for public and medical practitioners as well. The modern medical facilities, especially for AIDS cure is far off for the village people while the identification of the occurrence of the diseaseibily is a problem due to the limited awareness among the rural mass and also very high expensive treatment schedule. Therefore a preliminary attempt has been made to testify the effectiveness of valairasa chendooram in enhancing the cell mediated immunity in a vertebrate model and the results are discussed in this paper.

STANDARDISATION STUDIES ON SINGLE DRUGS USED IN THE MANAGEMENT OF VITILIGO

A.Saraswathy* S.Joy, and P.Brindha,
Captain Srinivasa Murti Drug Research Institute for Ayurveda,
(CCRAS) Chennai - 106.

The ancient traditional systems of medicine like Siddha with potent drugs for the treatment of various diseases need to be scientifically investigated and developed. In the present study single drugs used in the management of Vitiligo such as Eswarichedi - **Aristolochia indica** L. Kuppaimeni - Acalypha indica linn / Vallarai - Centella asiatica Kunkumappu - **Crocus sativus** and Karpokarisi - **Psoralea corylifolia L** were studied from standardisation point of view. Parameters investigated are microscopic features, physico - chemical standards and HPTLC profiles. These parameters would help in checking the adulteration and substitution of these single drugs under study and can promote the usage of genuine drugs. Spurious drugs could be detected and avoided.

Medicines prepared using standard drugs can have expected therapeutic effects and in ailments which cannot be controlled or cured in other system can certainly be cured with these genuine drugs of Siddha System. Role of these pharmacopoeial standards in assessing the quality control of these single drugs will be presented.

ANTI STRESSOR EFFICACY OF *OCIMUM SANCTUM* EXTRACTS ON NOISE STRESS

R.Archana,

Department of Physiology,
Dr.ALM Post Graduate Institute of Basic Medical Sciences,
University of Madras, Taramani, Chennai - 600 113.

The effect of four different crude aqueous extracts of *Ocimum sanctum* (OS) was studied on noise stress induced changes in albino rats. Acute noise stress causes a significant elevation in the plasma corticosterone level, thymus weight, and a significant decrease in the spleen weight. The organ weight of lymph node and adrenal did not show any variation. Pretreatment of the stressed group with the cold and the cold homogenised OS extract had significantly brought back the noise stress altered values to normal levels while the hot and the homogenised hot extract were less effective.

SUB-ACUTE TOXICITY OF GLYCOALKALOID ISOLATED FROM *SOLANUM TRILOBATUM LINN*

Yaamini Sudha Lakshmi.G[a]. Parimala [a] . S.Arutselvan.N[b] , Saradha Vasanth [c], C.S.Shyamala Devi[d]

a. Department of Ancient Science, Tamil University, Tanjore - 613 007, India.
b. Department of Biotechnology, CLRL, Adayar, Chennai - 600 020, India.
c. Department of Chemistry, Captain Srinivasamurthy Drug Research Institute, for Ayurveda, Chennai, India.
d. Department of Biochemistry, University of Madras, Guindy Campus, Adayar, Chennai, India.

The medicinal plant Alarka is botanically equated to Solanum trilobatum Linn. It is found commonly in Deccan Peninsula wild near hedges and fences. This prickly trailing undershrub is generally used in the treatment of respiratory disease and in the traditional system of medicine Siddha. Earlier studies were also done to prove that the compound glycoalkaloid isolated from Solanum trilobatum showed hepatoprotective effect on CCL induced toxicity.

The purpose of this present study is to evaluate the toxicity of glycoalkaloid, after 30 days of treatment. Six rats of each group were given glycoalkaloid at a dosage of 10mg to 50mg/kg b.wt comparing with a vehicle control. The glycoalkaloid fed rats had no effect on behaviour food, water intake and growth. Haematology and clinical study did not reveal any drastic differences between the control and treated rats, but very slight variations were observed in certain parameters. The mortality rate, body weight and weight of organs like liver, spleen, kidney and heart were assessed. The results showed that the glycoalkaloid did not produce any adverse effects in rats after the sub-acute treatment.

ANTI-OXIDANT EFFECT OF *CASSIA FISTULA*

G. Manonmani, V. Bhavapriya, S. Kalpana, S. Govindasamy, T. Apparanantham

Department of Bio-Chemistry & Molecular Biology,
University of Chennai, Chennai -600 025.

Aqueous extract of *Cassia fistula* flowers (ACF) was screened for its antioxidant effect in alloxan-induced diabetic rats. An appreciable decrease in peroxidation products viz., thiobarbituric acid reactive substances, conjugated dienes,hydroperoxides was observed in the heart tissues of ACF treated diabetic rats. The decreased activities of key antioxidant enzymes such as superoxide dismutase, catalase,GSHPxase and GSSRase in diabetic rats were brought back to near normal range upon ACF treatment. These results suggest that ACF has got promising antioxidative activity in alloxan diabetic rats.

Key words: *Cassia fistula*, alloxan, diabetes, lipid peroxidation, antioxidant enzymes.

ANTIOXIDATIVE ACTIVITY OF COMPOUNDS FROM KANJAMKORAI AND MARUDAM

N.Arutselvan[1] Saradha Vasanth[2] K. Balakrishna[3] and D.S.Jayakaran[3*]

1. Central Leather Research Institute, Chennai - 600 020.
2. Captain Srinivasa Murthi Drug Reasearch for Ayurveda, Chennai - 106.
3. Central Research Institute for Siddha, Chennai - 600 106.

In recent years the damaging role of free radicals and reactive oxygen species in diseases and ageing processes has been well established and as such antioxidants have acquired greater importance. Kanjamkorai (Ocimum americanum, Fam: Labiatae) and Marudam (Terminalis arjuna, Fam: Combretaceae) are used in the indegenous system of medicine. The formeis aromatic, carminative and stimulant. It is useful in cough, cold, bronchitis and dysentery. The paste of these leaves is used externally in skin diseases. The bark of the latter is used in cardiopathy, dysentery inflammations, leucorrhoea, urethrorrhea,ulcers, tumours, diabetics and hypertension.

In the present work, the isolation of nevadensin, a flavonoid from the leaves of kanjamkorai and arjunolic acid a triterpeniod from the bark of marudam and the subsequent investigation of their antioxidative activity in rat liver homogenate are reported. These compounds showed very good antioxidative activity compared with the standard drug BHA (Butylated hydroxy anisole).

EFFECT OF PAVALA CHUNNAM WITH AN ADJUVANT ON TISSUE LIPID PEROXIDATION AND ANTIOXIDANT STATUS IN CC14 INDUCED HEPATOTOXICITY

Dr.C.Chandrasekaran*, B.S.M.S. Ph.D., Dr.S.Parimala* Ph.D., Dr.Mr.Sethuraman, Ph.D., Dr.S.Sethupathy***, Ph.D.,**

* Dept. of Ancient Sciences, ** Centre for Tribal Studies,
Tamil University, Tanjavur - 613 005.
*** Division of Biochemistry, Rajah Muthiah Medical College,
Annamalai University, Annamalai Nagar - 608 002.

Antioxidants minimize the oxidation of crucial biomeleucles of cellular components. There is an increasing interest in the use of natural antioxidants in various pathological state. Carbon tetrachloride is a classic mode compound for free radical mediated cell injury. Therefore we envisaged to investigate the chemopreventive and therapeutic effect of pavala chunnam with Maharishi Amirth Kalash-4 as an adjuvant against CC14 induced hepatotoxicity. Marked prevention and curative potency against liver cell damage was found in pre and post treatment with these formulations which was indicated by altered antioxidant enzymes such as Superoxide dismutase, Catalase, Glutathione Peroxidase, Glutathione-S-Transferase and liver lipid peroxide level in terms of Thio barbituric acid reactive substances. The hepatoprotective effect of these formulations as clearly indicated by our study may be attributed to the membrane stabilizing and antiperoxidative activity of them and needs further study to shed more light on these aspects.

PROTECTIVE EFFECTIVE OF *WITHANIA SOMNIFERA* ON LIPID PEROXIDATION IN ADJUVANT INDUCED ARTHRITIC

M.Rasool, and P.Varalakshmi,
Department of Medical Biochemistry,Dr.A.L.M.P.G.IBMS,
University of Madras, Taramani, Chennai - 600 113.

Adjuvant induced arthritic in rats is used as a pathological model for the chronic inflammatory disease and to evaluate the efficacy of therapeutic agents. In the present study, induction was done using 0.1 ml of Complete Freund's Adjuvant (CFA) in Albino Wistar rats. *Withania somnifera* a widely used Indian medicinal plant was evaluated for its curative action against the above conditions. Drug was administered at a dosage of 1000 mg/kg body weight for 8 days starting from the 11th day of CFA Induction. A study on the lipid peroxidae and antioxidants were done in plasma and spleen. A significant increase in lipid peroxide levels was observed in plasma and spleen of arthritic rats. The antioxidants were found to be decreased in arthritic rats. Drug treatment mitigated the above changes considerably. For comparison, standard NSAID Indomethacin was used.

COMPARATIVE EFFECT OF LUPEOL AND LUPEOL LINOLEATE IN CADMIUM - INDUCED EXPERIMENTAL CYTOTOXICITY

S.Sunitha, P.Varalakshmi,
Department of Medical Biochemistry,
Dr.ALM PG IBMS, University of Madras,
Taramani, Chennai - 600 113.

Cadmium, a potent environmental and industrial toxin, is an established prostate carcinogen in rats. It shows hepatotoxicity and also nephrotoxicity based on the duration of exposure. Plant drugs such as triterpenes, are endowed with numerous therapeutic properties such as anti-urolithiatic and anti-arthritic effects. The present study compares the efficacy of two such pentacyclic triterpenes, lupeol and lupeol linoleate in cadmium induced hepatotoxic condition in terms of their effects on the activities of AT Pases. Fall in the enzymatic activities in the presence of cadmium indicates extensive membrane damage. Drug treatment restores the enzymatic activities to near control levels, the ester form of lupeol showing better effects in this respect than lupeol. This establishes the better therapeutic potential of lupeol linoleate in comparison with lupeol. Drug controls do not exhibit any toxic side effects, indicating its safe pharmacological property.

WOUND HEALING ACTIVITY OF *AEGLE MARMELOS*

K.Jagannathan, V.Hazeena Begum, A.Jaswath,
*Dept. of Siddha Medicine, Tamil University, Thanjavur - 613 001.
**Dept. of Pharmacology, Periyar College of Pharmaceutical,
sciences for girls, Tiruchirappalli - 620 021.

Effects of topical and intraperitoneal administration of methanolic extract of *Aegle marmelos* ointment and injection respectively on two type of would model in rats: (i) the excision and (ii) the incision wound model were studied. Both the injection and the ointment of the methanol extract of *Aegle marmelos* produced a significant response in both of the wound types tested. In the excision model the extract treated wounds were found to epithelialise faster and the rate of wound contraction was higher, as compared to control wounds. The extract facilitated the healing process as evidenced by increase in the tentsile strength in the incision model. The results were also comparable to those of a standard drug nitrofurazone.

Keywords: *Aegle marmelos*; Methanol extract; Wound healing activity; Nitrofurazone.

PHARMACOLOGICAL STUDIES OF A FEW *DALBERGIA* SPECIES

N.S. Nagarajan, C.N. Manoj & R. Priya,
Department of Chemistry, Gandhigram Rural, Institute (Deemed University),
GANDHIGRAM - 624 302.

Dalbergia (Family : Leguminosae & Sub family : Papilionaceae) species are known to be rich source of isoflavonoids and are reported to have a number of pharmacological properties like antiinflammatory analgesic and antiarthritic properties.In this paper, pharmacological studies like analgesic activity and anti inflammatory activity of three *Dalbergia* species viz. *Dalbergia horrida, Dalbergia beddomei* and *Dalbergia sympathetica,* not hitherto pharmacologically examined will be reported and the results will be presented.

HYPOGLYCEMIC EFFECT OF ABRAKA PARPAM IN ALLOXAN DIABETIC RATS

Kalpana S, Bhavapriya V, Manonmani G, Govindasamy S and Apparanantham T

Dept.of Biochemistry & Molecular Biology,University of Madras,Guindy Campus,Chennai.
C.R.I.S., Arumbakkam,Chennai.

The anti-diabetic potential of Abraka Parpam (AKB), a Siddha drug has been tested in experimental diabetic rats. Administration of the drug (400 mg/kg body wt) for 30 days showed hypoglycemic activity by bringing the blood sugar level within permissible limits. A significantly increased glucose tolerance was observed in AKB treated animals. Activities of carbohydrate metabolizing enzymes viz., hexokinase, glucose-6-phosphatase, fructose-1-6-diphosphatase and glycogen which were greatly altered during diabetes, were restored to normal levels upon AKB treatment. No side or toxic effects of the drug were seen during the course of study. The mode of action of the hypoglycemic activity remains to be elucidated.

Key Words

Abraka Parpam glucose tolerance, hypoglycemia, alloxan, hexokinase, glucose-6-phosphatase, fructose-1-6-diphosphatase.

BIOCHEMICAL STUDIES ON THE HYPOGLYCEMIC EFFECT ON "AAVIRAI KUDINEER" AN HERBAL FORMULATION IN ALLOXAN DIABETIC RATS

Bhavapriya V, Kalpana S[1] , Govindasamy S[1*] , and Appar anantham T[2]

[1] Department of Biochemistry and Molecular Biology,
University of Madras, Guindy Campus, Chennai - 600 025.

[2] Central Research Institute for Siddha,
Arumbakkam, Chennai - 600 106.

"Aavirai Kudineer" (AK) is a herbal decoction of seven botanical drugs, cited in the Gunapadam; a Tamil Siddha medical text. The anti - diabetic efficacy of this formulation was evaluated using alloxan-induced diabetic and normal rats. Glucose tolerance was observed within 1 hr in AK-treated rats (10ml/kg body weight) as compared to control. A significant decrease in the severe hyperglycemia characteristic of alloxan diabetes was noted after 15 days of AK treatment ($P < 0.001$). Further AK treatment reversed the elevated urea, creatinine, cholesterol and decreased protein values to near normal levels. Assay of glycogen content and chief carbohydrate metabolizing enzymes viz., hexokinase, glucose - 6 - phosphatase and fructose, 1 6 diphosphatase in the liver of diabetic and AK treated diabetic rats clearly ascertain the hypoglycemic efficacy of this formulation. The mode of action of this herbal formulation remains to be elucidated.

Key Words: Aavirai Kudineer, Alloxan, Glucose Tolerance, Hyperglycemla, Hexokinase, Glucose - 6 - phos phatase and frustose 1,6, diphosphatase.

PHARMACOLOGICAL EFFECT OF *SEMECARPUS ANACARDIUM LINN.* NUT MILK EXTRACT ON GLYCOPROTEIN LEVELS IN EXPERIMENTAL MAMMARY CARCINOMA IN RATS

V.Sujatha, and P.Sachidanandam,
Department of Medical Biochemistry, Dr.ALM Post-graduate Institute of Basic Medical Sciences, University of Madras, Taramani Campus, Chennai - 600 113.

A Siddha preparation, Semecarpus anacardium nut milk extract called "Serankottai Nei" is reported to potent pharmacological properties. Due to its multiple medicinal properties, the Semecarpus anacardium nut extract has been tried against experimental mammary carcinoma in animals. The present work compares the levels of plasma glycoprotein components namely, hexose; hexosamine and sialic acid in 7,12 dimethyl benz(a) anthracene (25 mg/ml) induced mammary carcinoma bearing rats with Semecarpus anacardium nut milk extract (200 mg/kg body weight / day) treated rats. Significant increase in the levels of glycoprotein components were observed in the mammary carcinoma bearing rats, whereas a sharp drop in their levels of glycoprotein components were observed in the drug treated rats. Drug tried on animals do not show any symptoms of toxic side effects which indicates that this drug can be used without much complication.

SEMICARPUS ANACARDIUM MEDIATED MODULATIONS ON LIPID SPECTRUM AND ITS METABOLISM IN EXPERIMENTAL HEPATOCELLULAR CARCINOMA

B.Premalatha & P.Sachidanandam

Department of Medical Biochemistry,
Dr.A.L.M.Post-Graduate Institute of Basic Medical Sciences,
University of Madras,Taramani Campus, Chennai - 600 113.

